Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 172

செவ்வாய்க்கிழமை
17 மே 2022

வைகாசி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

## தினமும் 80ஆயிரம் சிலிண்டர்கள்

நாளை முதல் தினசரி 80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

## வரலாற்றில் எப்போதும் சந்தித்திராத

# மிகமோசமான நிலைமையை எதிர்கொள்ளப்போகிறோம்!

### அபாயச் சங்கு ஊதினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க



- திறைசேரியில் பணம் இல்லை
- மின்வெட்டு 15 மணி நேரமாகலாம்
- ஒரு நாளைக்கே பெற்றோல் கையிருப்பு
- எரிவாயுவுக்கு டொலரைத் தேடவேண்டியுள்ளது
- 14 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு
- சலுகை வரவு - செலவுத் திட்டம் விரைவில்
- பணவீக்கம் அதிகரிக்கும்
- எரிபொருள் விற்பனையில் தொடர்ந்தும் நஷ்டம்
- அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மை
- தேசிய சபை உதயம்

கொழும்பு, மே 17

நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான நிலையில் உள்ளது. திறைசேரியால் ஒரு மில்லியன் டொலரைக்கூட தேடிக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இப்போதுள்ளதை விட அடுத்த ஒரு சில மாதங்கள் மிக மோசமானதாக இருக்கும். பயங்கரமான சவாலையே நான் பொறுப்பேற்கின்றேன். கத்திமேல் நடப்பதை விடவும் இது பயங்கரமானது. எனினும், உயிரைப் பணயம் வைத்தேனும் போராடுவேன். நெருக்கடிக்குள் இருந்து நாட்டை மீட்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

15 ➤

## சவாலை வர்ணித்த ரணில்

தனக்கு முன்னாலுள்ள சவாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெண்கட்டி வட்டம் என்ற நாடகவசனங்களூடாக வர்ணித்த விதம் சமூக ஊடகங்களில் பேசு பொருளாகியுள்ளது.

'நான் பொறுப்பேற்றது மிகவும் அபாயகரமான சவால். கத்தியின் மேல் நடப்பதைவிட இது பயங்கரமான சவால் மிகுந்தது. மிகவும் ஆழமானது. அடியே தெரியவில்லை. பாலங்கள் மெல்லிய கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளன. கைப் பிடி இல்லை. என்னுடைய கால்களில் கழற்ற முடியாத பாதணிகள் போடப்பட்டுள்ளன. அதன் அடியில் கூர்மையான இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்டுள்ளன. குழந்தையைப் பாதுகாப்பாக அடுத்த பக்கம் கொண்டு செல்ல வேண்டி உள்ளது. இந்தச் சவாலை நான் நாட்டுக்காகவே பொறுப்பேற்றேன். எனது நோக்கமும் அர்ப்பணிப்பும் ஒரு தனிமனிதன், ஒரு குடும்பம், அல்லது ஒரு கூட்டத்தை பாதுகாப்பது அல்ல முழு நாட்டினதும் மக்களை காப்பாற்றுவதே. இளைஞர்களின் எதிர்காலத்தை காப்பாற்றுவதே. உயிரைப் பணயம் வைத்து இந்தச் சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்தச் சவாலை வெற்றிகொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு பெற்றுத் தாருங்கள்' என்று குறிப்பிட்டார்.

(அ-ஒ-இ)

## ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விரைவில் தனியார் மயம்

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 17

இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவையை தனியார் மயப்படுத்த முன்மொழிவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர் 13 ➤

## இன்று தலைகாட்டுவாரா மஹிந்த ராஜபக்ச?

கொழும்பு, மே 17

நாடாளுமன்ற அமர்வு இன்று இடம்பெறவுள்ள நிலையில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அதில் கலந்து கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 9ஆம் திகதி அவரது ஆதரவு குண்டர்கள் அரசாங்க 13 ➤

## மீளவும் வருகின்றது 19 ஆவது திருத்தம்

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 17

உடனடியாக 20ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கி 19ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று 08 ➤

### நாடாளுமன்றம் இன்று கூடும்

## அனைத்துக் கட்சிகளும் ரணிலுக்கு ஆதரவு!!!

### சஜித் மற்றும் சுயாதீன அணிகள் பதவியேற்காமல் ஒத்துழைப்பாம்

கொழும்பு, மே 17

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக நாடாளுமன்றம் இன்று கூடவுள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்றில் 13 ➤

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு வருவதே சந்தேகம்!

கொழும்பு, மே 17

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றில் இன்று விவாதத்துக்கு வருவதே சந்தேகம் என்று தெரி 13 ➤

## ஜோன்ஸ்டன் உள்ளிட்ட 24பேரைக் கைது செய்க!

### சட்டமா அதிபர் ஆலோசனை

கொழும்பு, மே 17

முன்னாள் அமைச்சரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சனத் நிசாந்த மற்றும் மூத்த பிரதிப் பொலிஸ்மா 08 ➤

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் சிங்கள மாணவர்களும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில் சிங்[illegible]ளும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

13 ➤

## கல்வி நடவடிக்கைகள் இன்று மீண்டும் ஆரம்பம்

பக்.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் தோல்வியடைந்தால் இலங்கை தோல்வியடையும்

## மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 17**

**ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் இலங்கையும் தோல்வியடையும். இந்தத் தோல்வி அடுத்த சில ஆண்டுகளுக்கான தோல்வியாக இருக்காது. மாறாக இலங்கையின் இருப்புக்கான தோல்வியாக அமையும் என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டபிள்யூ.ஏ.விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: நம்பிக்கைகள் பயனளிக்காது. ஏனென்றால் நம்பிக்கைகள் மனதின் கற்பனையே. இலக்குகளை அடைவதற்காக நாங்கள் பணியாற்ற வேண்டும் - பாடுபடவேண்டும். அதனால் அமைப்பு முறையில் உண்மையான மாற்றத்துக்கான போராட்டங்கள், கிளர்ச்சிகள் தொடரவேண்டும். தங்கள் நடவடிக்கைகளுக்குப் பொறுப்புக்கூறக்கூடியவர்களால் ஆளப்படும் ஊழல் அற்ற சமூகத்தையே மக்கள் கோரி நிற்கின்றனர். அதைநிர்வாக அமைப்புக்கு வெளியே இருந்து நடைமுறைப்படுத்தவேண்டும்.

சட்டபூர்வமாக ஆணை வழங்கப்பட்ட ஆட்சி முறைமையுடன், மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய அனைவரையும் உள்ளடக்கிய ஸ்தாபனங்களை உருவாக்கவேண்டும். மக்களின் செல்வத்தைக் கொள்ளையடிக்கும் நிறுவனங்களை நிறுவுவதற்கான சாத்தியத்தை நீக்கவேண்டும். ஆட்சியாளர்களின் அதிகார துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான உரிய ஏற்பாடுகளை முன்வைக்கவேண்டும். இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகள் தோல்வியடைந்தால், இலங்கை தோல்வியடையும். ஒரு தேசமாக இலங்கையின் இருப்புக்கான தோல்வியாக அது அமையும்- என்றார். (எ-இ)



# எரிபொருள் விநியோகம் வழமைக்கு

கொழும்பு, மே 17

எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தனியார் தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விசாக பூரணை மற்றும் விடுமுறை தினங்களில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையில் தற்போது விநியோகப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, மேல் மாகாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகம் முடிவடைந்துள்ளது. ஏனைய மாகாணங்களுக்கு எரிபொருள்கள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார். (க-இ)

# எரிபொருள்களுக்கு வரிசை வேண்டாம்

## அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே 17

நாட்டில் உள்ள ஆயிரத்து 190 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் முடியும்வரை, எரிபொருளைப் பெறுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என்று எரிசக்தி அமைச்சர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 3 நாள்களுக்குத் தேவையில்லாமல் எரிபொருள் சேகரிப்பில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். இந்தியக் கடன் வசதியின் கீழ் மேலும் மூன்று எரிபொருள் கப்பல்கள் அடுத்த இரண்டு வாரங்களில் நாட்டுக்கு வரவுள்ளன. டீசல் ஏற்றிய கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்துள்ளது என்று அவர் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (க-இ)

# மருத்துவ நெருக்கடி நாட்டில் அதிதீவிரம்



கொழும்பு, மே 17

இருதய நோயாளர்களுக்கான மருந்துப் பொருள்கள், அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்கள் உட்பட பல மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க தெரிவித்தார்.

சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளை ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட குழு பிரதமர் அலுவலகத்தில் ஒன்று கூடி கலந்துரையாடலில் ஈடுபட்டது. அதன்போதே சுகாதார அமைச்சின் செயலாளர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதார அமைச்சின் செயலாளர் உட்பட அமைச்சின் அதிகாரிகள், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், அரச மருந்து உற்பத்தி நிறுவனம், சுதேச மருந்து மற்றும் உபகரண உற்பத்தியாளர் சங்கங்கள், தனியார் மருத்துவமனை சங்கங்கள் மற்றும் மருந்து இறக்குமதியாளர் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ம)

# தேசிய நிறைவேற்றுச் சபையை அமைக்க பிரதமர் இணக்கம்

## கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, மே 17

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய வகையில், தேசிய நிறைவேற்றுச்சபையொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்தார். விரைவில் வரவு- செலவுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கும் அவர் தயாராகி வருகின்றார் .

இவ்வாறு 10 கட்சிகள் கூட்டணியின் பங்காளியான பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறுகோரி 10 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் அனுப்பியிருந்தார்.

இதுதொடர்பில் கலந்துரையாடுவதற்காக 10 கட்சிகளின் பிரதிநிதிகள், நேற்று முற்பகல் பிரதமரைச் சந்தித்தனர். இதன்போது அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சுப் பதவிகளை ஏற்காவிட்டாலும், நாடாளுமன்றத்தில் குழுக்களில் அங்கம் வகித்து அரச நிர்வாகத்தில் பங்கேற்பதற்கு மேற்படி கட்சிகளின் பிரதிநிதிகள் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

நாடாளுமன்றில் சுமார் 15 ஆலோசனைக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன என்று சந்திப்பின் பின்னர் உதயகம்மன்பில தெரிவித்தார். விரைவில் இடைக்கால வரவு-செலவுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார் எனவும் அவர் தெரிவித்தார். அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டத்தை விரைவில் நிறைவேற்றுவது சம்பந்தமாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (க-44)

# புதிய அமைச்சர்கள் இருவர் ஓரிரு நாள்களில் நியமனம்!

கொழும்பு, மே 17

அமைச்சரவைக்கு மேலும் இரண்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய கல்வியமைச்சராக முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும், விவசாயத்துறை அபிவிருத்தி அமைச்சராக அனுர பிரியதர்சன யாப்பாவும் ஓரிரு தினங்களில் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த இவர்கள் இருவரும் அண்மையில் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ள குழுவில் உள்ளடங்குகின்றனர். (எ-இ)

# சவேந்திரவின் பதவியைப் பறிப்பதற்குப் பரிசீலனை

கொழும்பு, மே 17

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை, இராணுவத் தளபதி மற்றும் கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி பதவிகளில் இருந்து நீக்குவதற்குப் பரிசீலிக்கப்படுகின்றது என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராணுவத் தளபதி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அறிவிக்காது அமெரிக்கத் தூதுவரை சந்தித்தமை அடிப்படைக் குற்றச்சாட்டாக முன் வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கத் தவறியமை இரண்டாவது குற்றச்சாட்டாகச் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அநுராதபுரத்தில் உள்ள ஞானக்காவின் வீடு மற்றும் ஹொட்டலைப் பாதுகாக்கத் தவறியமை தொடர்பாகவும் சவேந்திர சில்வா மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

ஞானக்காவின் வீடு மற்றும் ஹொட்டலுக்குப் பாதுகாப்பு வழங்காமை தொடர்பாகப் பல இராணுவ அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிய முடிகின்றது.

அதேநேரம், ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பில், இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் சுதந்திரத் தாயகத்துக்காக முள்ளிவாய்க்காலில் உறுதியெடுப்போம்

## சரவணபவன் தெரிவிப்பு



**முல்லைத்தீவு, மே 17**

**முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் சிக்குண்டு சிதையுண்டு போன ஆன்மாக்களின் கர்மா எப்படி எதிரிகளை பாடாய்படுத்துகின்றதோ அதேபோன்று அந்த ஆன்மாக்களுக்கு துரோகமிழைத்தவர்களையும், துரோகமிழைப்பவர்களையும் பாடாய்ப்படுத்தும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை புதன்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை யிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கற்பனைகூட செய்து பார்க்க முடியாத நவீன யுகத்தின் மிகப் பெரும் மனிதப் பேரவலம் நடந்தேறி 13ஆண்டுகளாகின்றன. முள்ளிவாய்க்காலில் சாவை அணைத்துக்கொண்ட ஆன்மாக்கள் 13ஆண்டுகளாக அழுதுகொண்டிருக்கின்றன. தங்களின் நீதிக்காக ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஆன்மாக்களை மிஞ்சிய சக்தி எதுவுமில்லை என்பதை அவை இப்போது நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

எந்த மக்கள் எங்களின் எதிரிகளைத் தூக்கிக் கொண்டாடினார்களோ அவர்களே எதிரிகளை இப்போது தூக்கி மிதித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த ஆன்மாக்கள் எந்த இலட்சியத்துக்காக - எந்தத் தாகத்துக்காக - தாயகத்துக்காக செத்து மடிந்தனவோ அதைத் தூக்கியெறிந்து துரோகமிழைப்பவர்களும் கர்மாவிலிருந்து தப்ப முடியாது.

எந்தவொரு சமரசத்துக்குமிடமின்றி - விட்டுக்கொடுப்புமின்றி - கடைசிக்கணம் வரையில் தமிழர்களின் சுதந்திரத் தாயகத்துக்காக மடிந்த அந்த ஆன்மாக்களுக்கு, நாமும் நேர்வழியில் விசுவாசமாக - அவர்கள் மீது சத்தியம் செய்து நீதியையும், சுதந்திர தமிழர் தாயகத்தையும் பெற்றுக் கொடுப்பதற்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் உறுதி பூணுவோம் - என்றுள்ளது. (ஒ)



# ஹிந்துவின் செய்திக்கு சாணக்கியன் கண்டனம்

கொழும்பு, மே 17

விடுதலைப் புலிகள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று தி ஹிந்து வெளியிட்ட செய்திக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் உறுதியற்ற நிலையை விடுதலைப்புலிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்றும் இதற்காக அவர்கள் தம்மை ஒருங்கிணைத்துள்ளனர் என்றும் தி ஹிந்து செய்தி வெளியிட்டிருந்தது.

இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைத் தடுப்பதற்காகவா இவ்வாறான செய்திகள் வெளியிடப்படுகின்றன? - என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

# நாகர்கோவில் வித்தியாலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் 4ஆம் நாள் நினைவேந்தல் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாக செத்துமடிந்த உறவுகளுக்காக மட்டுமல்லாது, 1995ஆம் ஆண்டு நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் சிறிலங்கா விமானப் படையினரின் குண்டு வீச்சால் படுகொலை செய்யப்பட்ட 39 மாணவர்களுக்கும் இந்த நினைவேந்தலில் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-14)



கிளிநொச்சி– வட்டக்கச்சி பொதுச்சந்தையில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி நேற்று வழங்கப்பட்டது. அத்துடன் 2009ஆம் ஆண்டு இனப்படு கொலையின் நினைவாக நினைவுச் சுடரும் ஏற்றப்பட்டது. (ம-14)



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் நான்காவது நாளை முன்னிட்டு அம்பாறை- வீரமுனை படுகொலை நினைவுத்தூபியில் நேற்றுமுன்தினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ம-14)




**ஆனானப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே, நாட்டுமக்களின்ர எழுச்சியால துண்டைக் காணம் துணியைக் காணம் எண்டு ரணிலுக்குப் பின்னால ஓடிப்போய் ஒளிச்சிருக்கேக்க, அதே ஜனாதிபதியால நியமிக்கப்பட்ட ஒருத்தர் உரு வந்தமாதிரி சன்னதம் ஆடிக் கொண்டிருக்கிறார். அவர் வேற ஆருமில்லை, எங்கட வடக்குக்குப் பொறுப்பா ஜனாதிபதியால போடப்பட்ட க்ளீன்சேவ் 'ஜீ' தான்.**

**இதுவரைக்கும் அந்தப் பதவியில இருந்தவையெல்லாம் நிர்வாக விசயம் சம்பந்தமாகத்தான் தலையிடுவினம், உத்தரவு போடுவினம். இஞ்ச நிர்வாக விசயம் எண்டது அரசாங்க அதிகாரிகளோட சம்பந்தப்பட்டது. மற்றும்படி சனங்களின்ர சமயம்,கலை, கலாசாரம் எண்ட விசயங்களில அவை மூக்கை நுழைக்கிறேலை. அப்பிடி நுழைச்சால் பெரும் சிக்கல் வருமெண்டதும், அது தங்கட அதிகாரத்துக்க அடங்காதெண்டதும் அவைக்கு நல்லாத் தெரியும். ஏனெண்டால் அவையெல்லாம் இதுக்குமுதல் ஏதொ ஒருவகையில நிர்வாகம் சம்பந்தப்பட்ட வேலையில இருந்தவை. அதால அவைக்கு நிர்வாகம் எண்டால் என்ன, அரசியல் எண்டால் என்ன எண்டெல்லாம் தெரியும்.**

**ஆனால், இப்பத்தை 'க்ளீன்சேவ் ஜீ' அப்பிடியில்லை. ஏற்கனவே ஆரியகுளத்தை முனிசிபல்காரர் திருத்தேக்குள்ள அதுக்கு நடுவில பௌத்த சின்னம் வைக்கவேணும் எண்டும் இவர் அனுப்பின கடிதத்தை மேயர் மணிவண்ணன் அஞ்சுசதத்துக்கும் மதிக்கேலை. அதால 'ஆரியகுளம் ஆருக்குச் சொந்தம்? முனிசிபலுக்கு சொந்தமெண்டு எண்பிக்க வேணும்' எண்டெல்லாம் பிறகு கடிதம் அனுப்பி குழப்பவேலையளை 'ஜீ' பாத்தவர். ஆனால் முனிசிபல்காரர் பிடிகுடுக்காததால, ஆரியகுளம் திறப்பு விழாவுக்கு 'வந்தால் பிக்குவோடதான் வருவன்' எண்டு அழையா விருந்தாளியான நாகவிகாரைப் பிக்குவை 'கண்டியன் டான்ஸோட' கூட்டிக் கொண்டு வந்து குறளி வித்தை காட்டின ஆள் தான் இவர். கொஞ்சநாள் ஆரியகுள விசயத்தில பம்மிக் கொண்டிருந்தவர், வெசாக்கோட திரும்ப முருங்கை மரத்தில ஏறியிருக்கிறார்.**

**நாடே பத்தியெரிஞ்சு கொண்டிருக்கேக்க, ஆரிய குளத்துக்குள்ள வெசாக்கூடு வைக்க வேணுமெண்டு நாகவிகாரைப் பிக்குவுக்கு ஒரு ஆசை. அதை ஆமியிட்ட சொல்ல, அவை முனிசிபல் காரரிட்ட பெர்மிசன் கேட்டிருக்கினம். ஆனால் ஆரியகுளத்துக்குள்ள எந்த மதச் சின்னமும் வைக்கிறேலை எண்டு முடிவெடுத்ததால அப்பிடிச் செய்ய ஏலாது எண்டு முனிசிபல்காரர் சொல்லியிருக்கினம். பிறகும் பிக்கு அடங்கேலை. எங்கட 'ஜீ'யின்ர காதில விசயத்தைப் போட, 'ஜீ' வெசாக் கூடு வைக்க அனுமதி குடுக்கோணும் எண்டு முனிசிபல்காரருக்கு ஓர்டர் போட்டிருக்கிறார். அதுக்கும் அவை மாட்டன் எண்டிட்டினம். அதைக் கேட்டதும் 'ஜீ'க்கு வந்திச்சே கோபம்.**

**என்ர ஓர்டரை ஃபலோ பண்ணாட்டி, முனிசிபலை இண்டைக்கே கலைச்சிடுவன். என்ர பவர் தெரியாமல் கதைக்கிறியள். வெசாக் கூடு வைக்க பெர்மிசன் குடுக்காட்டி நடக்கிறதே வேற எண்டு போனில வெருட்டியிருக்கிறார். நினைச்சவுடன் கலைக்கிறதுக்கு இதென்ன மணல் வீடோ? அவருக்கு இது முனிசிபல்டி எண்டும் தெரியேலை, நாட்டில என்ன நடந்து கொண்டிருக்கு எண்டும் தெரியேலை, இவரை மாத்துறதுக்கு கொழும்பில முடிவெடுத்திட்டினம் எண்டும் தெரியேலை.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நோக்கங்களை விட்டு அனைவரும் ஒன்றுபடவேண்டும்

## கரு ஜயசூரிய மீண்டும் அழைப்பு



**கொழும்பு, மே 17**

**நாட்டில் தற்போதுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காக குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக செயற்படுவதிலிருந்து விலகி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - இவ்வாறு நியாயமான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்க வேண்டும். சுதந்திரத்தின் பின்னர் பாரதூரமான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் வேறு விடயங்களுக்கு முக்கியத்துவமளித்து அவற்றில் அவதானம் செலுத்துவதைவிட, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கே முன்னுரிமையளிக்க வேண்டும்.

நாட்டுமக்களின் வாழ்வாதாரத்தை வழமைக்குக் கொண்டு வருவதற்கான சூழலை ஏற்படுத்துவதற்காக நாடு அராஜக சூழலை நோக்கித் தள்ளப்படுவதைத் தவிர்ப்பதே அரசியல் மற்றும் சிவில் அமைப்புக்களின் கடமையாகும்.

நாட்டிலுள்ள அரசியல் நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கும் அரசமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது வழமையான அரசியலிலிருந்து விலகி தற்காலிகமாகவே இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். இதற்காக சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைத்து செயற்பட வேண்டும். குறுகிய காலத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சர்வகட்சி அரசாங்கம் நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டதாக அமைய வேண்டும். இந்த அரசாங்கத்தின் பிரதான இலக்கு பொருளாதார நெருக்கடியைச் சீர்செய்து, நாட்டை வழமை நிலைக்குக் கொண்டு வருவதாகும். எதிர்வரும் 12 மாதங்களுக்குள் இந்த நடவடிக்கைகள் நிறைவுசெய்கப்படவேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களிலிருந்து செயற்படுவதைத் தவிர்த்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்- என்றார். (எ-இ)

# காலிமுகத்திடல் தாக்குதல் விளக்கம் வேண்டும்!

## ருவான்



கொழும்பு, மே 17
கோத்தா கோ கம போராட்டம் மீதான தாக்குதல்களை மேற்கொண்ட பிரதான சந்தேகநபர்களை இதுவரையில் கைதுசெய்ய முடியாமல் போயுள்ளமைக்காக காரணம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பிலும் அறியத் தரவேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

'கோத்தா கோ கம' ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுக்களை முன்னெடுத்து, அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ருவன் விஜேவர்தன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார். அதன் அடிப்படையிலேயே ருவன் விஜேவர்தன பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கடந்த 9ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட வன்முறைகளின் காரணமாக அரச மற்றும் தனியார் சொத்துக்கள் பலவற்றுக்கு சேதம் விளைவிக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளடங்கலாக 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்காக வந்தவர்களோ அல்லது தாக்குதல்களை மேற்கொண்டவர்களோ இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை.

தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரைக் கைதுசெய்யாமல், தாக்குதல்களின் பின்னர் ஏற்பட்ட வன்முறைகளுடன் தொடர்புடைய நபர்கள் மாத்திரம் கைது செய்யப்பட்டுள்ளமையானது நியாயமற்றதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறான பின்னணியில் நிராயுதபாணிகளான போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர்களில் பிரதான சந்தேகநபரைப் பொலிஸாரால் கைது செய்யமுடியாமல் போயுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

பொது மக்களும் இவ்விடயம் தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் உள்ளனர் -என்றுள்ளது. (எ-இ)

# காலிமுகத்திடலில் மக்களைத் தாக்கியோர் ஏன் இன்னமும் கைதாகவில்லை?

*சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்*

கொழும்பு, மே 17
காலிமுகத்திடலில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது, தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரை கைதுசெய்யப்படாமை கண்டனத்துக்குரியது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அந்தச் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி நுவன் போபகே தெரிவித்துள்ளதாவது:
நாட்டின் ஏனைய பகுதிகளில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 230 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எந்தவொரு பகுதியிலும், வன்முறைச் சம்பவங்கள் பதிவாவதை சட்டத்தரணிகள் என்ற வகையில் நாம் ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றுடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்படவேண்டும்.

வன்முறைகளில் ஈடுபட்டிருந்தவர்கள், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அழைப்பின்பேரில் அலரிமாளிகைக்கு வந்திருந்தனர். இதில் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர்புள்ளது. அதனால் காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படவேண்டும்- என்றார். (எ-இ)

# தேசபந்து தென்னக்கோனை பதவிநீக்கி விசாரியுங்கள்!

## தேசிய மக்கள் சக்தி வலியுறுத்து



கொழும்பு, மே 17
காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பதவியில் இருக்கும்போதே, சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை. அவரைப் பதவி நீக்கம் செய்து விசாரணை நடத்த வேண்டும் எனத் தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கொழும்பு அலரிமாளிகையில் இருந்து கொழும்பு 'கோத்தா கோ கம'வுக்கு வந்த குண்டர்களைத் தடுக்க வேண்டாமென பாதுகாப்பு செயலாளரே பணிப்புரை விடுத்தார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர்கள் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச போன்றவர்களே. 'கோத்தா கோ கம'வைத் தாக்கியவர்கள் கைதுசெய்யப்படாத நிலையில், அடுத்தடுத்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்- என்றார். (எ-இ)

# மே 9 வன்முறை: 398 பேர் கைது!



கொழும்பு, மே 17
காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகை வளாகத்தில் இடம்பெற்ற கலவரத்தை அடுத்து, நாடளாவிய ரீதியில் பதிவான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நேற்றுக் காலை 6 மணிவரை 398 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த ஆர்ப்பாட்டங்களின்மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில், சட்டமா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற 756 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதுவரை 398 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 101 சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி கோத்தாபய மீது சித்திரவதைக் குற்றச்சாட்டு!

## இரு அமைப்புகள் இணைந்து ஆணவப்படுத்தி முன்வைப்பு

**கொழும்பு, மே 17**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இராணுவ ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றியபோது 1989இல் காணாமலாக்கப்பட்ட சுமார் 700 பேரின் பெயர் விவரங்கள் உள்ளடக்கிய அறிக்கையொன்றை, சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் மற்றும் இலங்கையில் ஜனநாயகத்துக்கான பத்திரிகையாளர்கள் ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து வெளியிட்டுள்ளன.**

அந்த அறிக்கையில் 1989 ஆம் ஆண்டளவில் கடத்தப்பட்டு, மிக மோசமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றிலிருந்து தப்பியவர்களின் திடுக்கிடச்செய்யும் வகையிலான வாக்குமூலங்களும் இணைக்கப்பட்டுள்ளன. அந்தச் சம்பவங்களில் தற்போதைய ஜனாதிபதியின் வகிபாகம் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

71 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1989 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் இரகசியப்பட்டியலில் குற்றங்களுடன் தொடர்புடைய ஒரு சந்தேகநபராகத் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள மாத்தளை மாவட்டத்தின் இராணுவ ஒருங்கிணைப்பாளராக கோத்தாபய பதவி வகித்தபோது, அவரது கட்டளையின்கீழ் செயற்பட்ட பாதுகாப்புப்படையினரால் 700க்கும் மேற்பட்டவர்கள், குறிப்பாக பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டனர்.

தற்போதைய ஜனாதிபதி சுமார் இரு தசாப்தகாலம் இராணுவத்தில் பணியாற்றியிருந்தார். இதில் பெரும்பான்மையான காலம் தமிழ்ப் போராளிகளுடனான போரில் செலவிடப்பட்டது. ஆனால் 1980ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களில் நடைபெற்ற கிளர்ச்சிகளை மிகவும் மிருகத்தனமான முறையில் முறியடிக்கும் நடவடிக்கைகளில் அவர் வகித்த பங்கு எப்போதும் கவனிக்கப்படாமலேயே இருந்திருக்கின்றது.

கோத்தாபய நன்கு அறியப்பட்ட அரசியல்வாதியாக மாறுவதற்கு முன்னர் 1989ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் மிகமோசமான சித்திரவதைக்கூடங்களாகத் திகழ்ந்த பாடசாலைகள், விருந்தினர் விடுதிகள் பலவற்றில் அவர் இருந்தமையை சித்திரவதைகளிலிருந்து உயிர்தப்பியவர்கள் நினைவுகூர்ந்துள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாதுகாப்புச்செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன ஆகியோர், சட்டவிரோதமாக பல்லாயிரக்கணக்கான சிங்களவர்களைக் கொன்று குவித்த 1989ஆம் ஆண்டு கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியவர்கள் என்பதுடன் 2009ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களிலும் முக்கியமான பங்கு வகித்தவர்களாவர் - என்றுள்ளது. (க-இ)



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் ஐந்தாம் நாளை முன்னிட்டு திருகோணமலை தம்பலகாமம் நான்குவாசல் பிள்ளையார் கோயிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ம-14)



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் ஐந்தாவது நாளான நேற்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு - உடையார்கட்டுப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு நினைவேந்தல் இடம்பெற்றது. (ம-14,19)



# டென்மார்க் தேவாலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் டென்மார்க்கின் கிறின்சட் நகரில் உள்ள தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது, முள்ளிவாய்க்கால் பேரவலத்தில் உயிர் நீத்தவர்களுக்கான விசேட நினைவேந்தலும் திருப்பலிப் பிரார்த்தனையும் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் தேவலாயத்தில் வைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபிக்கு சுடர் ஏற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ம-14)



### தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின்

# முள்ளிவாய்க்கால் ஊர்தி மன்னாரைச் சென்றடைவு

மன்னார், மே 17

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடுசெய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி நேற்று மன்னாரை சென்றடைந்தது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த ஊர்தி கொண்டுசெல்லப்படவுள்ளது. இந்த நிலையிலேயே நினைவேந்தலின் 5ஆம் நாளான நேற்று மன்னார் மாவட்டத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. பொதுமருத்துவமனைக்கு முன்பாக ஊர்தி நிறுத்தப்பட்டு, முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த மக்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (ம-14,213)

# போரை வென்றது பொன்சேகா; கோத்தா தனித்து செயற்படார்!

## முன்னாள் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 17

விடுதலை புலிகளுடனான போரை வெற்றி கொண்டது சரத் பொன்சேகாவே. அதற்கு தலைமைத்துவத்தை மட்டுமே கோத்தாபய ராஜபக்ச வழங்கினார் என்று அமைச்சரவையின் முன்னாள் செயலாளர் எஸ். அமரசேகர தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நான் 50 வருட அரச சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளேன். மஹிந்த ராஜபக்சவை எனக்கு பிடிக்கும் என்ற போதும், நான் ராஜபக்சவாதி அல்லன்.

கோத்தாபய ராஜபக்ச அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் முதலாவதாக மேற்கொள்ளப்பட்ட வரிக்குறைப்புத் தொடர்பான யோசனையின் போது பி.பி.ஜெயசுந்தரவே, அதை அவசரமாக நிறைவேற்றினார். இந்த வரிக்குறைப்புக் காரணமாக அரசுக்கு 600 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

நான் அமைச்சரவை செயலாளராக இருந்த போதும், அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இடையிலேயே பி.பி. ஜெயசுந்தரவால் வரிக் குறைப்பு யோசனைக் கான ஆவணம் அவசரமாகக் கொண்டுவரப்பட்டது. இதன்போது நான், இந்த யோசனை தொடர்பில் அமைச்சர்களின் ஆலோசனைகளைப் பெற்று அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கலாம் என்று ஜனாதிபதியிடம் கூறியபோது அதற்கு அவர் உடன்பட்டார். ஆயினும் பி.பி.ஜெயசுந்தரவே, இது இந்த வாரமே அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றுகூறி, அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டார்.

ராஜபக்சக்கள் எதைக் கூறினாலும் அதை உடனடியாக செய்துவிட வேண்டும் என்பதில் பி.பி.ஜெயசுந்தரவே ஆர்வமாக இருப்பார். பி.பி. ஜெயசுந்தரவை, ஜனாதிபதியின் செயலாளராக நியமிப்பதற்கு பசில் ராஜபக்சவே பரிந்துரையை செய்திருந்தார்.

தற்போதைய நிலையில் ராஜபக்சக்களின் அரசியலை அடுத்த பரம்பரைக்குக் கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கோத்தாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்சவின் கீழ் இருந்து சிறப்பாக சேவையாற்றியபோதும் அவருக்கு, தனித்து நின்று தீர்மானங்களை எடுக்கக் கூடிய நிர்வாகத்திறமை இல்லை. போரை வெற்றி கொண்டது சரத் பொன்சேகாவே. தலைமைத்துவத்தை மட்டுமே கோத்தாபய ராஜபக்ச வழங்கினார் - என்றார். (எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் ஏற்பட்ட கலவரத்தால்

# ரூ. 2,000 கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன

**கொழும்பு, மே 17**

**நாட்டில் கடந்த நாள்களில் ஏற்பட்ட கலவரத்தால் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**




காலிமுகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அரச எதிர்ப்பாளர்கள் மீது பெரமுனவின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலை அடுத்து நாடெங்கும் கலவரங்கள் வெடித்தன.

ஆளும் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டதுடன் பெறுமதியான வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்தக் கலவரத்தால் ஏற்பட்ட சொத்திழப்பே சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஆர்ப்பாட்டம் என்ற போர்வையில் பொது அல்லது தனியார் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்படுமாயின் அது தொடர்பில் அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்களும் பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, 1997 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு, அவசர தொலைபேசி இலக்கமான 119 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டும் இது தொடர்பில் தெரியப்படுத்த முடியும் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## இலங்கையின் மோசடியாளர்களை அவுஸ்திரேலியாவில் அனுமதியோம்

### அந்த நாட்டிலும் மக்கள் போர்

கான்பெரா, மே 17

இலங்கையில் ஆளும் பெரமுனவினருக்கு எதிராக போராட்டம் வலுத்துள்ள நிலையில், இந்தப் போராட்டம் வெளிநாடுகளிலும் தினம்தினம் எதிரொலித்து வருகின்றது.

பெரமுனவின் உறுப்பினர்களும் ஊழலுடன் தொடர்புடைய அவர்களது சகாக்களும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையக்கூடாது.

அவர்களை அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதியோம் என்று வலியுறுத்தி அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்றத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையின் ஊழல் மோசடியாளர்கள் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையக்கூடாது என்பதை வலியுறுத்தி ஒரு லட்சம் பேரின் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கையும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிட்டனிலும் அரசாங்கத்துக்கு எதிராகத் தீவிரமான போராட்டங்கள் வெடித்துள்ளன.

ஜனாதிபதி கோத்தாபய பதவி விலகவேண்டும் என்று பிரிட்டன் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர். (ம)

## அநுராதபுர கலவரம்

# கைதுசெய்யப்பட்ட 13 பேர் மறியலில்

கொழும்பு, மே 17

அநுராதபுரத்தில் ஏற்பட்ட கலவரத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் நாட்டில் ஏற்பட்ட கலவரம் அநுராதபுரத்துக்கும் வியாபித்தது. முன்னாள் அமைச்சர்களான எஸ்.எம்.சந்திரசேன, சன்ன ஜயசுமன ஆகியோரின் இல்லங்கள் கடும் சேதத்துக்கு உட்படுத்தப்பட்டதுடன் பல கோடி ரூபா பெறுமதியான சொத்திழப்புக்களும் ஏற்பட்டன. இந்தக் கலவரங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 22 பேர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட நிலையில் மேலும் 13 பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு அவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம)

## தமிழர்களுக்கு எதிரான கலவரங்களுக்கு இழப்பீடு ஏன் இன்னும் வழங்கவில்லை?

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி

கொழும்பு, மே 17

தென்பகுதியில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற கலவரங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாறான துரித நடவடிக்கையை ஏன் தமிழர் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைகளின்போது மேற்கொள்ளவில்லை? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மே 9ஆம் திகதிய வன்முறைகள் தொடர்பான மதிப்பீடுகளையும் நிவாரணங்களையும் அரசாங்கம் உடனடியாக அறிவித்துள்ள நிலையில், இதுகாலம்வரை தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு உரிய மதிப்பீடுகளோ, விசாரணைகளோ, நிவாரணங்களோ வழங்கப்பட்டதா? என்று அனைவரும் சிந்திக்க வேண்டும்.

இலங்கையில் 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரச கரும மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது அதனைத் தமிழர்கள் எதிர்த்தனர். இதற்கு எதிர்வினையாக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் நூற்றுக்கணக்கான கோடி ரூபா சொத்துக்களை அழித்ததுடன் பலநூறு தமிழர்களையும் கொன்று குவித்தது. ஆனால், இன்றுவரை இது தொடர்பான விசாரணைகளும் நடைபெறவில்லை, நிவாரணமும் கிடைக்கவில்லை.

1977ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன தமிழ் மக்கள்மீது வன்முறையை ஏவிவிட்டார். இதன்போதும் 1983ஆம் ஆண்டு கலவரத்தின் போதும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், திட்டமிட்ட வகையில் அவர்களது வீடுகளும், வியாபார நிறுவனங்களும் கொள்ளையிடப்பட்டு தீயூட்டப்பட்டன. 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது தமிழர்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் சொல்லிமாளாதவை. ஆயினும் தமிழர்களுக்கு இழப்பீடு என்று என்ன கிடைத்தது?

ஒரு நாளில் நடைபெற்ற இந்தக் கலவரத்தில் ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்து அழிக்கப்பட்டதாக அரசாங்கம் ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறது. இதில் சொத்துக்களை இழந்த பலர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் என்ற வகையிலும் மேலும் பெரும்பான்மை சிங்கள தேசிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற வகையிலும் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் துரிதகதியிலான ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்திருக்கிறது.

மேற்கண்டவற்றிலிருந்து இலங்கை அரசாங்கம் சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் நலன்களில் காட்டுகின்ற அக்கறையை தமிழ் மக்கள் மீது காட்டுவதில்லை என்பது தெளிவாகின்றது - என்றுள்ளது. (ம)


# கலவரத்தில் தொலைந்த மஹிந்தவின் நாய் மீட்பு!

வீரகெட்டிய- தங்காலையிலுள்ள மஹிந்த ராஜபக்சவின் வீட்டில் வளர்க்கப்பட்டு காணாமல்போன மூன்று நாய்க்குட்டிகளில் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியின் வீரகெட்டிய பிரதேசசபை உறுப்பினர் ஒருவரின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி நாட்டில் நடைபெற்ற கலவரத்தில் மஹிந்தவின் கார்ல்டன் வீடும் தாக்கப்பட்டது.

இதன்போது அந்த வீட்டில் வளர்க்கப்பட்ட 'லப்டோர்' இனத்தைச் சேர்ந்த மூன்று நாய்க்குட்டிகள் காணாமல் போயின.

அவற்றைக் கண்டுபிடிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவற்றில் ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளருமான ஒருவரின் வீடொன்றில் இருந்து மீட்கப்பட்டது.



இந்த நாய்க்குட்டியை பிரதேச உறுப்பினரின் மகள் பராமரித்து வந்துள்ள நிலையில் அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நினைவேந்தலைத் தடுக்கவா ஊரடங்கு?

கொழும்பு, காலிமுகத்திடலில் அரசாங்கத்தின் ஆதரவுடன் கடந்தவாரம் நடத்தப்பட்ட வன்முறைகளை அடுத்து, நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை இப்போது கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கின்றது. அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஆதரவுக் காடையர்களின் வன்முறைகளால் கொதிப்படைந்து, எம்.பிக்களின் வீடுகளைக் கொளுத்துமளவுக்கு கோபத்தின் உச்சிக்குப்போன மக்கள் இப்போது அமைதிக்குத் திரும்பியுள்ளனர்.

நாடெங்கும் நிலவிய அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் சில நாள்கள் தொடர்ந்த நிலையில், நேற்றுமுன்தினம் அதிகாலை நீக்கப்பட்டது. ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட பின்னரும், நாடு அமைதியாகவே இருந்தது. பௌத்தர்களின் புனித நாளான வெசாக் பண்டிகையும் மக்களால் அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

நாட்டின் நிலைமை சீராகின்றது என்று மக்கள் ஆசுவாசப்பட்ட சமயம் நேற்றுத் திடீரென ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் ஊரடங்குச் சட்டம் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கின்றது. முதலில் நேற்றிரவு 8 மணிக்கு அமுல்ப்படுத்தப்படுவதாக இருந்த ஊரடங்கை சிறிது நேரத்தில் இரவு 11 மணிக்கு நடைமுறைக்கு வரும் என்று திருத்தம் செய்யுமளவுக்கு ஒருவித குழப்பத்தோடு அறிவிக்கப்பட்டிருக்கிறது இந்த ஊரடங்கு. எந்தவிதக் காரணமும் இன்றி அறிவிக்கப்பட்டிருக்கும் இந்த இரவு நேர ஊரடங்கு நடைமுறை சிங்கள மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்க, தமிழ் மக்கள் மனங்களிலோ சந்தேகத்தைத் தோற்று வித்திருக்கின்றது.

தமிழ் மக்களின் தாயகப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் வேகமெடுத்திருக்கின்றன. மே மாதம் 18ஆம் திகதி – நாளை – முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ராஜபக்ச அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் போரில் இறந்த உறவுகளை நினைவுகூரும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமையும் மறுக்கப்பட்டிருந்தது. இந்த நினைவேந்தல்களைத் தடுப்பதற்கு பொலிஸார் நீதிமன்றத் தடையுத்தரவுகளை கடந்த ஆண்டுகளில் பெற்றிருந்தனர். நினைவுகூர்ந்தவர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பாய்ந்திருந்தன. இந்தத் தடைகளை மீறி தமிழ் மக்கள் நினைவேந்தல்களை நடத்தியிருந்தபோதும், உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைந்துருகி ஆசுவாசமாக அஞ்சலிக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு வாய்க்கவில்லை.

இலங்கையில் இப்போதுள்ள நிலைமை வித்தியாசமானது. பொருளாதார நெருக்கடியால் சிங்கள மக்கள் மத்தியில் எழுந்துள்ள எழுச்சி, அவர்களை சில விடயங்களை நோக்கிச் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது. இத்தனைகாலம் இனவாதம், மதவாதத்தை முன்னிறுத்தி முன்னெடுக்கப்பட்ட அரசியலை பெரும்பான்மையின இளையோர்கள் ஓரளவுக்குப் புரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். சிறுபான்மை மக்களின் உரிமைகள் பற்றியும், எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றியும் சற்றுப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் போதுமானதல்ல என்றபோதும், நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் தெரியும் ஒரு சிறு ஒளிக் கீற்று என்று எடுத்துக்கொள்ளலாம்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் இப்போது பிரதமராகப் பதவியேற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் நினைவேந்தல்களை நடத்துவதற்கு தடையில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால், ராஜபக்சவினருக்கும், ராஜபக்சவினரால் பதவிகளில் அமர்த்தப்பட்டிருக்கும் இராணுவப் பின்னணி கொண்டவர்களுக்கும் அது இனிப்பாக இருக்கப்போவதில்லை. இப்போதுள்ள நிலைமையால் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை மீறிச் செயற்பட முடியாதபோதும், நினைவேந்தல்களைத் தடுக்க அவர்கள் தங்களாலான முயற்சிகளைச் செய்வார்கள் என்பது திண்ணம்.

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள் தெற்கிலும் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. தமிழ் மக்களின் துன்பங்கள், அவர்கள் பட்ட இன்னல்கள் பெரும்பான்மையின மக்களிடம் கடத்தப்படவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றுக்கெல்லாம் காரணமானவர்கள் அதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். காரணமே இன்றி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச்சட்டம் நினைவேந்தலைத் தடுப்பதற்கான எத்தனிப்பாகவும் இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு இப்போதைய நிலைமை ஒன்றைப் புரியவைத்திருக்கும் [illegible] விதைத்தால் வினையை அறுக்கவே வேண்டும் [illegible] யான நேரத்தில் அதற்குரிய தண்டனையைக் கொடுத்தே தீரும்.

## நாளொரு நல்வார்த்தை

"காலம் உனது உயிராகும். அதை வீணாக்குவது உன்னை நீயே கொலை செய்வதற்கு ஒப்பாகும்." – ஜேம்ஸ் ஆலன்




### பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப

# வடக்கு - கிழக்கில் இணைந்த நிர்வாகம்

### சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

**கிளிநொச்சி, மே 17**

**வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த வகையில் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவது பொருத்தமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் 30 வருடங்களுக்கு மேலாக பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்டு உற்பத்தி தொழில்துறைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இதற்கு இலங்கை அரசாங்கம் போரைக் காரணமாகக் கூறியது. உலக நாடு களும் இலங்கை அரசாங்கம் சொல்வதைக் கேட்டு பின்னின்றன. போருக்குப் பின்னர் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென பெருந்தொகையான நிதியை உலக நாடுகள் வழங்கியிருந்தன. அவ்வாறு வழங்கப்பட்ட நிதியைக் கூட அதிவேகப் பாதைகள், தெற்கின் அபிவிருத்திகளுக்குச் செலவிட்டனர்.

ஆனாலும் வடக்கு - கிழக்கு மக்கள் தங்களது சுய பொருளாதாரத்தால் முன்னேற்றமடைந்தனர். இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்டதாக ஒரு நிர்வாகம் கிழக்கையும், வடக்கையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டால் சிறப்பாக அமையும். இலங்கையின் அரசமைப்புக்குள் இந்தியாவின் கூடுதலான கரிசனையில் உதவி வழங்கும் நாடுகளையும் சேர்த்துக் கொண்டால் வடக்கு - கிழக்குக்கான தனிக் கட்டமைப்பை உருவாக்க முடியும்.

குறிப்பாக உலக நாடுகளின் நிதியை இந்தியாவின் மேற்பார்வையில் கொண்டு வருவதன் ஊடாக பல சலுகைகளையும் எதிர்பார்க்கலாம். புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களின் முதலீடுகளை வடக்கு - கிழக்கில் அதிகரிப்பதன் மூலம் தொழிற்றுறைகளை இயக்க முடியும் - என்றார். (க-113)

# பிரதமர் ரணிலுக்கு ஒத்துழைப்பு ஹர்ஷ டி சில்வா வாக்குறுதி!

கொழும்பு, மே 17

நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்டு. அமைச்சரவையில் அங்கம் வகிப்பதற்கு இணங்கவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்ப்பாரேயானால், அவர் நாட்டுமக்களின் அடிப்படைக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதியை இணங்கச்செய்யவேண்டும். தற்போது நாடு மிகுந்த நெருக்கடியான நிலையில் இருக்கின்றது. எனவே இந்த நிலை தீவிரமடையாமல் இருப்பதற்கு அவசியமான பங்களிப்பை வழங்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது - என்றார். (ம)

நாளை 18.05.2022 புதன்கிழமை வைகாசி 04

சுபநேரம் : 04.23 - 05.53
ராகுகாலம்: 11.53 - 01.23

திருஞானசம்பந்தர் குருபூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று உங்கள் செயலில் கவனமுடன் செயற்படவும். விழிப்பு ணர்வு தேவை. குழப்பங்கள் வந்து மறையும். புதிய முயற்சி இன்று வேண் டாம். எதிர்பாராத சிரமங்களை ஏற்படும்.

**இடபம்:** நண்பர்கள் வழியே லாபம் அடைவீர்கள். மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினை விலகும். ஆதாயம் அதிகரிக்கும். தொழி லில் லாபம் உண்டாகும்.

**மிதுனம்:** இன்று அரசு வகையில் நீங்கள் எதிர்பார்த்த ஒன்று நிறை வேறும். மற்றவரால் மூலம் புதிய அனுபவம் ஒன்றைப் பெறுவீர்கள். பிரச்சினை முடிவுக்கு வரும்.

**கடகம்:** உங்களுடைய முயற்சி பலி தமாகும். நல்லவர்களின் ஆதரவு உண்டாகும். பணியிடத்தில் எதிர்பாா்த் திருந்தஒன்றில் ஆதாயம் காண்பீர்கள். முயற்சி பலிதமாகும்.

**சிம்மம்:** பயணங்களில் அலைச்சல் உண்டானாலும் அதனால் லாபம் உண்டு. உறவினர் வருகையால் சுபச்செலவு உண்டாகும். தொழிலில் இருந்த தடை விலகும். நிதி நிலை சீராகும்.

**கன்னி:** வர வேண்டிய பணம் கைக்கு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிக ரிக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த செயலில் இன்று அனுகூலம் அடை வீர்கள். வெற்றி அடைவீர்கள்.

**துலாம்:** பணியிடத்தில் நேற்று இருந்த சோர்வு விலகி உற்சாகமாக செயற் படுவீர்கள். பழைய பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும். உங்கள் முயற்சிக்கு பலன் உண்டு. லாபம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** பேச்சிலும், செயலிலும் கவனம் தேவை. விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டிய நாள். உங்கள் வேலையில் கூடுதல் கவனம் தேவை. எதிரிகளால் தொல்லை உண்டு. தேவையற்ற குழப்பங்கள் உண்டாகும்.

**தனுசு:** சுபச்செலவு அதிகரிக்கும். அதற்கேற்ப வரவுகளும் வந்து சேரும். புதிய முயற்சி கை கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். மனஅழுத்தம் அடைய வேண்டாம்.

**மகரம்:** நினைத்தது நிறைவேறும். உங்களுக்கு வேண்டியதை இன்று அடைவீர்கள். பழைய பிரச்சினைக்கு இன்று முடிவு காண்பீர்கள். நிம்மதியான நாள். திடீர் வருமானம் உண்டாகும்.

**கும்பம்:** உறவினர் ஒருவரால் நன்மை ஒன்றை அடைவீர்கள். வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். புதிய வாய்ப்புகள் உங்க ளைத் தேடி வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** உங்கள் முயற்சி வெற்றி அடையும். குடும்பத்தில் பெருமிதம் கொள்வார்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். மகிழ்ச்சி கூடும். வேலை யில் இழுபறி உண்டாகலாம்.

## மஹிந்த ஆதரவுக் குண்டர்களை கைது செய்யுமாறு போராட்டம்!!




கொழும்பு, மே 17

காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்னால் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்மு றைகளுக்கு பின்னணியில் உள்ள வர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி சோசலிச வாலிபர் சங்கம் கொழும்பிலுள்ள பொலிஸ் தலை மையகத்துக்கு முன்னால் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத் தது. (அ-ஒ-இ)

## வழுக்கைத் தலை கேலி பாலியல் குற்றமே

### இங்கிலாந்து தொழிலாளர் தீர்ப்பாயம்

இங்கிலாந்து, மே 17

வழுக்கைத் தலை குறித்து கேலி செய்வது பாலியல் குற்றம் என இங்கிலாந்து தொழிலா ளர் தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளது.

இங்கிலாந்தின் மேற்கு நகரிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் 24 ஆண்டுகளாக வேலை பார்த்து வந்த ஒருவர் திடீரென பணி நீக்கம் செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக அவர் இங்கிலாந்தின் தொழி லாளர் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்தார். அவர் தன்னுடைய மனுவில் தனது நிறுவனத் தின் உயர் அதிகாரி தன்னை வழுக்கை என்று கேலி செய்தார் எனவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் நியாயமற்ற முறையில் தான் பணி நீக்கம் செய்யப்பட்டேன் எனவும் கூறி யிருந்தார்.

இந்த வழக்கு 3 நீதிபதிகளைக் கொண்ட அமர்வின் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கை விசாரித்த நீதிபதிகள் “பணியிடங்களில் பெண்களின் அங்கங் களை கேலி செய்வது பாலியல் குற்றம் என் பதைபோல், ஆண்களின் வழுக்கையை கேலி செய்வதும் பாலியல் குற்றத்துக்குள் அடங்கும். அதன் அடிப்படையில் சம்பந்தப் பட்ட நிறுவனம் உரிய இழப்பீடு வழங்க வேண் டும்” என்று தீர்ப்பளித்துள்ளனர். (ச-இ)

### ஜோன்ஸ்டன்...

அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள் ளிட்ட 24பேரைக் கைது செய்யுமாறு சட் டமா அதிபரால் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி அலரிமாளிகை முன் பாகவும், ஜனாதிபதி செயலகம் எதிரிலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்கு தல் நடத்திய குற்றச்சாட்டிலேயே மேற்படி கைது ஆலோசனை வழங்கப்பட்டுள் ளது. (அ-ஒ-இ)

### மீளவும்...

இடம்பெற்றது. இதன்போது இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்த 21ஆம் திருத்தச் சட்ட தனிநபர் யோசனையை முன்நகர்த்துவதற்கு முன்னதாக, 19ஆம் திருத்தச் சட்டத்தை மீள நடைமுறைப்படுத் துவதற்கே அமைச்சரவை முன்னுரிமை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### கல்வி...

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளி னதும் கல்வி நடவடிக்கைகள் இன்று செவ் வாய்க்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமா கும் என்று கல்வி அமைச்சு அறிவித் துள்ளது.

இன்று ஆரம்பமாகும் பாடசாலைகள் க. பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்காக எதிர் வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்பட்டு மீளவும் ஜூன் 6ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதேவேளை- ஜூன் 20ஆம் திகதி விடு முறை வழங்கப்படும் என்று முன்னர் வெளியான செய்தி தவறானது என்று கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ஒ-இ)

## தாயக மண்ணில் அரங்கேறிய இனப்படுகொலையை மறக்கவும் மாட்டோம்: மன்னிக்கவும் மாட்டோம்

இறுதிக்கட்டப்போரின் போது 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இதே நாளில் உதயனில் வெளியான செய்திகள் நினைவூட்டலுக்காக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரணிலின் அரசாங்கத்துக்கு ஆதரவு

# இந்தியாவின் தாளத்துக்கு ஆடுகின்றன தமிழ்க் கட்சிகள்

## கஜேந்திரகுமார் கொதிப்பு



**யாழ்ப்பாணம், மே 17**

**இந்திய அரசாங்கத்தின் அருவருடிகளாக மாறியுள்ள சில தமிழ்க் கட்சிகள், இன்று புதிய பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அரசின் எடுபிடிகளாகச் செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன. அதே போன்று ஒரு தரப்பு அமைச்சர் பதவிகளையும் ஏற்பதாக அறிவித்துள்ளது. சுமந்திரன் கொஞ்சம் நாசூக்காக அரசாங்கத்துடன் இணையமாட்டோம் ஆனால், தவிசாளர் பதவியை ஏற்பதாகக் கூறியுள்ளார். ஆனால், அதையும் தாண்டி பெரும் தேசியவாதியாகத் தன்னைக் காட்டும் க.வி.விக்னேஸ்வரன், தான் அமைச்சர் பதவியை ஏற்கத் தயார் என்று அறிவித்துள்ளார்.

இனப்படுகொலைகளை மேற்கொண்ட ராஜபக்ச அரசாங்கம், ரணில் விக்கிரம சிங்கவை பிரதமராக நியமித்துள்ளது. இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற தமிழ் கட்சிகள் இனப்படு கொலையாளியின் ஆட்சிக்கு முண்டு கொடுக்கப் போகின்றனர் என்பதை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

கோத்தபாயவை எதிர்க்கின்றேன் எனப் பொய்கூறி மலசலகூடம் செல்வதற்குக் கூட அவரிடம் கேட்டுச் செல்லும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இந்திய அரசின் அடிவருடிகளான முதுகெலும்பில்லாத சில தமிழ்க் கட்சிகள் ஆதரவளிப்பது முற்றிலும் கண்டிக்கப்படவேண்டியது- என்றார். (க-26)

## மின் தடை அட்டவணை

| மின்தடை நேரம் | மின் வழங்கல் திரும்பும் நேரம் | காலம் | பிரிவு |
|---|---|---|---|
| காலை 09 மணி முதல் காலை 09.30 மணி வரை | காலை 11 மணி முதல் காலை 11.30 மணி வரை | 2 மணி நேரம் | D,E,F |
| காலை 11 மணி முதல் காலை 11.30 மணி வரை | காலை 01 மணி முதல் காலை 01.30 மணி வரை | 2 மணி நேரம் | G,H,I |
| காலை 01 மணி முதல் காலை 01.30 மணி வரை | காலை 03 மணி முதல் காலை 03.30 மணி வரை | 2 மணி நேரம் | J,K,L |
| காலை 03 மணி முதல் காலை 03.30 மணி வரை | காலை 05 மணி முதல் காலை 05.30 மணி வரை | 2 மணி நேரம் | A,B,C |
| காலை 05 மணி முதல் காலை 05.30 மணி வரை | காலை 06.40 மணி முதல் காலை 07.10 மணி வரை | 1 மணி 40 நிமி. | E,F,G,H |
| காலை 06.40 மணி முதல் காலை 07.10 மணி வரை | காலை 08.20 மணி முதல் காலை 08.50 மணி வரை | 1 மணி 40 நிமி. | I,J,K,L |
| காலை 08.20 மணி முதல் காலை 08.50 மணி வரை | காலை 10 மணி முதல் காலை 10.30 மணி வரை | 1 மணி 40 நிமி. | A,B,C,D |
| காலை 09 மணி முதல் காலை 09.30 மணி வரை | காலை 11 மணி முதல் காலை 11.30 மணி வரை | 2 மணி நேரம் | P,R |
| காலை 11 மணி முதல் காலை 11.30 மணி வரை | காலை 01 மணி முதல் காலை 01.30 மணி வரை | 2 மணி நேரம் | Q,V |
| காலை 01 மணி முதல் காலை 01.30 மணி வரை | காலை 03 மணி முதல் காலை 03.30 மணி வரை | 2 மணி நேரம் | U,W |
| காலை 03 மணி முதல் காலை 03.30 மணி வரை | காலை 05 மணி முதல் காலை 05.30 மணி.வரை | 2 மணி நேரம் | S,T |
| காலை 05 மணி முதல் காலை 05.30 மணி வரை | காலை 06.40 மணி முதல் காலை 07.10 மணி வரை | 1 மணி 40 நிமி. | P,Q,R |
| காலை 06.40 மணி முதல் காலை 07.10 மணி வரை | காலை 08.20 மணி முதல் காலை 08.50 மணி வரை | 1 மணி 40 நிமி. | U,V,W |
| காலை 08.20 மணி முதல் காலை 08.50 மணி வரை | காலை 10.00 மணி முதல் காலை 10.30 மணி வரை | 1 மணி 40 நிமி. | S,T |
| காலை 06.மணி முதல் காலை 06.20 மணி வரை | காலை 09 மணி முதல் காலை 09.20 மணி வரை | 3 மணி நேரம் | CC |
| காலை 05 .மணி முதல் காலை 05.20 மணி வரை | காலை 08 மணி முதல் காலை 08.20 மணி வரை | 3 மணி நேரம் | M,N,O, X,Y,Z |

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 04 . 1940



இறப்பு 15 . 05 . 2022

### மகாதேவன் மனோன்மணி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்கிலிப்பாய் வீதி இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவன் மனோன்மணி நேற்று முன்தினம் (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சற்குணம் முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சற்குணம் மகாதேவனின் அன்பு மனைவியும், ஜாமினி (லண்டன்), திருவரன் (கனடா), பாமினி (சுவிஸ்), சாந்தி (இணுவில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வம் (லண்டன்), செஜநந்தினி (கனடா), கோபி (சுவிஸ்), இராசையா (இணுவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காருண்ஜன் (லண்டன்), அஸ்விந் (லண்டன்), சாகித்திகா (கனடா), ஆரணி (சுவிஸ்), கீர்த்தி (சுவிஸ்), அருட்குமரன் (லண்டன்), அருள்வதனி (இணுவில்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

கொக்கிலிப்பாய் வீதி, இணுவில். 021 224 3706 தகவல்: குடும்பத்தினர் (CS 44710)(3/6)

# காணாமலாக்கப்பட்டோரின் அலுவலகம் சுயாதீனமாகத்தான் செயற்படுகின்றதாம்

## *தவிசாளர் தெரிவிப்பு*

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகம் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோரின் எந்தவிதத் தலையீடுகளுமின்றி சுயாதீனமாகச் செயற்பட்டு வருகின்றது என்று காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர்களில் ஒருவராகப் பதவிவகித்த ஷிராஸ் நூர்தீன் மூன்று வாரங்களுக்கு முன்னர் பதவிவிலகுவதாக அறிவித்திருந்தார். சுயாதீனமான முறையில் செயற்பட வேண்டிய காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளில் நீதியமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களின் தலையீடுகள் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மையளிக்கக்கூடியவகையிலான முன்னேற்றகரமான நடவடிக்கைகளை முன்னெடுக்காத அலுவலகத்தில் அங்கம் வகிப்பதில் பயனில்லை என்பதனாலேயே அதிலிருந்து விலகினேன் என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை தவிசாளர் மகேஷ் கட்டுலந்த மறுத்துள்ளார்.

நாட்டிலுள்ள நீதிமன்றங்களைச் சுயாதீனக்கட்டமைப்புக்கள் என்று கூறுகின்ற போதிலும், அவற்றுக்கு அவசியமான நிதி உள்ளிட்ட ஏனைய வளங்கள் அமைச்சின் ஊடாகவே வழங்கப்படுகின்றது. அதேபோன்று காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகமும் நிதி அடிப்படையில் சுயாதீனமாகச் செயற்படக்கூடிய கட்டமைப்பல்ல. எனவே நீதியமைச்சின் ஊடாக எமது அலுவலகத்துக்கு அவசியமான நிதி வழங்கப்படுவதுடன், ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனுசரணையும் வழங்கப்படுகின்றது. நீதியமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் போன்றோர் எமக்கு எந்தவித அழுத்தங்களையும் பிரயோகித்ததில்லை. மாறாக காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் சுயாதீனமாகவும், செயற்திறனுடனும் இயங்குவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர் -என்றார். (க-இ)



கீரிமலை, கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தில் நேற்று 108 பானை விசேட பொங்கல் உற்சவம் பக்திபூர்வமாக நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருளாதார நெருக்கடிகளால்

# மாணவர்கள் இடைவிலகல் அதிகரிக்கும் அபாயநிலை!

### ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

மன்னார், மே 17

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், கற்றல் செயற்பாட்டில் இருந்து மாணவர்கள் இடைவிலகும் அபாய நிலைமை உருவாகியுள்ளது என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

நாட்டில் தற்போது வரலாறு காணாத பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எரிபொருள்கள் மற்றும் கட்டடப்பொருள்களின் விலை உயர்வால் கூலித்தொழிலாளிகளின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளன. இதனால் அவர்கள் வருவாயற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வேறு தொழிற்துறைகளை தேடவேண்டிய நிலைக்கு அந்தக் குடும்பங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அவர்கள் இந்தப் பொருளாதாரப் போரைச் சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர். இதனால் அந்தக் குடும்பங்களில் உள்ள மாணவர்கள் தமது கற்றலைத் தொடர முடியாமல் இடைவிலகும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சமூக ஆர்வலர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மன்னார், முல்லைத்தீவு போன்ற கரையோரப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றுவந்த பின்னர் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-14,213)



## 125 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்

மன்னார், மே 17

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற் கொண்டு மன்னார் பிரதேச செயலர் பிரிவில் பொருண்மியம் நலிந்த தெரிவு செய்யப்பட்ட 125 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப்பொதிகள் அண்மையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

மன்னார் 543ஆவது இராணுவப் படைப்பிரிவின் ஏற்பாட்டில், சிங்கப்பூரில் உள்ள ஒரு நிறுவனத்தால் இந்த உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ம-14,60)

## சொற்பொழிவுகள்

**நீர்வேலி கந்தசுவாமி**

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தலைமையுரையை ஆலயத்தின் பரிபாலனசபைத்தலைவர் த.சோதிலிங்கமும் சிறப்புச்சொற்பொழிவை 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்ற கருப்பொருளில் சைவப்புலவர் கந்த. சத்தியதாசனும் ஆற்றவுள்ளனர்.

**நயினாதீவு அறநெறிப் பாடசாலை**

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 19ஆவது சொற்பொழிவு நயினாதீவு நாகபூஷணி அமுதசுரபி இந்து அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூசை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் சைவ வாழ்வு' என்ற கருப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

**உரும்பிராய் நாகலிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலை**

யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 20ஆவது சொற்பொழிவு. உரும்பிராய் நாகலிங்கேஸ்வரர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூசை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து. 'நாவலர் பெருமானின் வாக்கும் வாழ்வு' என்ற கருப்பொருளில் சைவப்புலவர் பொன். சந்திரவேல் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (ம-14)




## மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் ஆழ்கடல் மீன்பிடித்துறை பாதிப்பு!

### மீனவர்கள் கவலை தெரிவிப்பு

திருகோணமலை, மே 17

நாட்டில் தற்போது நிலவிவரும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது என்று திருகோணமலை சல்லி கிராம மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:-

எமது தொழிலுக்கு நாளாந்தம் சுமார் 40 லீற்றருக்கும் அதிகமான மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சென்றால் அவ்வாறு கிடைப்பதில்லை. இதனால் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது. எமது பொருளாதாரம் முழுக்க முழுக்க இந்தத் தொழிலையே நம்பியுள்ளது. தற்போது எமது பொருளாதாரத்தை நாம் இழந்துள்ளோம் - என்றனர். (ம-14)



மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய தரம் 5 மாணவர்களுக்கான இரண்டாம் நாள் செயலமர்வு நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி ஆசிரியர் ப.சசிரதன் வளவாளராக கலந்துகொண்டார். செயலமர்வில் 93 மாணவர்கள் பங்குபற்றினர். (ம-14,159)



## இலவச தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்தோருக்கு சான்றிதழ்

கிளிநொச்சி, மே 17

கிளிநொச்சி கருணா நிலையத்தில் தையல் பயிற்சியை நிறைவு செய்த 11 ஆவது அணியினருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதன்போது பயிற்சி நிறைவு செய்தோரால் வடிவமைக்கப்பட்ட ஆடைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

குறித்த பயிற்சிநெறியானது 6 மாத இலவச பயிற்சியாக வயதுவேறுபாடின்றி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14, 214)

## வல்லை கோயிலருகில் மோ.சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம், மே 17

வல்லை முனியப்பர் கோயிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞரொருவரின் 'பல்சர்' ரக மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

உடுப்பிட்டிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற இளைஞர், முனியப்பர் கோயிலுக்கு செல்வதற்கு மோட்டார் சைக்கிளை வீதியோரம் நிறுத்திவிட்டு சென்று திரும்பிவந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருட்டு போனது தெரியவந்தது. இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (ம-14,23)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

முல்லைத்தீவு, மே 17

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நாளை காலை 6.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மல்வேலி ஆலடி அதிசயவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சாமஸ்ரீ தேசமான்ய சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைகள் வெடிக்க வாய்ப்பு; பொலிஸார் கண்காணிப்பு உச்சம்

கொழும்பு, மே 17

**நாட்டில் எந்த இடத்திலும் வன்செயல்கள் வெடிக்கலாம் என்று புலனாய்வுத் துறை எச்சரித்துள்ள நிலையில், பொலிஸார் நடமாடும் கண்காணிப்புப் பணியை அதிகரிக்க வேண்டும் என்று அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளார்.**

நாடளாவிய ரீதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். சமூக ஊடகங்கள் மூலம் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடவும், வன்முறைச் செயல்களில் ஈடுபடவும் மக்கள் தூண்டப்பட்டு வருகின்றனர் என்று புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே தெரிவித்துள்ளனர். இதனால் குறிப்பிட்ட இடங்களில் மக்கள் கூடுவதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

ஏதேனும் கலவர சூழ்நிலையைக் கட்டுப்படுத்த தேவைப்பட்டால் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கான உத்தரவுகளையும் அவர் வழங்கியுள்ளார். (எ-இ)



ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி ஷேக் கலீபா பின் சயீத் அல் நஹ்யானின் மறைவுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இரங்கல் தெரிவித்துள்ளார். அத்துடன் ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள இரங்கல் புத்தகத்திலும் அவர் கையொப்பமிட்டுள்ளார். (ச)

## சூடு நடத்தும் அதிகாரம்: திரும்பப் பெற இணக்கம்

கொழும்பு, மே 17

அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளின் பின்னர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் விலக்கிக்கொள்ளப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கலவரங்கள் மீண்டும் மூண்டால் மட்டுமே பாதுகாப்புப் படையினருக்கு அவ்வாறான உத்தரவு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கத்தியால் குத்தி ஒருவர் கொலை!

கொழும்பு, மே 17

கொட்டாஞ்சேனையிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புக்கு அருகில் ஒருவர் நேற்றுமுன்தினம் கத்தியால் குத்திப்படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதே குடியிருப்பில் வசிக்கும் 42 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சந்தேக நபர் பிரதேசத்தைவிட்டுத் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## 50,000 யூரோ பணத்தை வைத்திருந்தவர் கைது!

கொழும்பு, மே 17

பொரலஸ்கமுவ- பெபிலியான பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் 50 ஆயிரம் யூரோ நாணயத்தாள்களை வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இதன்பெறுமதி இலங்கை ரூபாவில் 18 மில்லியனுக்கும் அதிகம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புஞ்சிபொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-இ)



வெசாக்கை முன்னிட்டு புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவினரால், மக்களுக்கு நேற்று முன்தினம் கஞ்சி வழங்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.கேரத் தலைமையில் சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து மக்களுக்கு இனிப்புக் கஞ்சி வழங்கப்பட்டது. (க-19)

## ரம்புக்கனை பகுதியில் ரயில் தடம்புரண்டது

கொழும்பு, மே 17

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் ரம்புக்கனை ரயில் நிலையத்துக்கு அருகில் தடம் புரண்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

இந்த விபத்தால் மலையகத்துக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் குறித்த தடத்தில் எரிபொருள் ஏற்றிச்சென்ற ரயிலொன்று தடம்புரண்ட நிலையில், அதே இடத்திலேயே நேற்றும் இந்த ரயில் தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



வெசாக் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் உலருணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 500 பேருக்கு உலருணவுப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. நிகழ்வில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் வணசிங்க உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ம-14-20)

## வெளிவிவகார அதிகாரிகளுக்கு சீனா வழங்கிய உணவுப்பொதி

### வெளிநாட்டு சேவை அதிகாரிகள் சங்கம் கடும் எதிர்ப்பு

கொழும்பு, மே 17

சீனாவில் இருந்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கு விநியோகிக்கப்பட்ட அரிசி, சர்க்கரை, பருப்பு போன்றவற்றை கொண்ட பொதிகள் தொடர்பில், வெளிநாட்டு சேவை அதிகாரிகள் சங்கம் கடுமையான ஆட்சேபனையை வெளியிட்டுள்ளது.

இந்த செயற்பாட்டுக்கு வெளிவிவகார செயலாளர் ஜயநாத் கொலம்பகே அங்கீகாரம் வழங்கியமையை சங்கம் கண்டித்துள்ளது.

சீனத் தூதரகம் இந்த நிதியை சீன நட்புறவு சங்கத்துக்கு வழங்கியுள்ளது. வெளிவிவகார அமைச்சின் நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் முகவரிகளை அறிந்துகொள்ள முயற்சித்தபோதே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. தமது ஆட்சேபனையை வெளியிடும் முகமாக, வெளிநாட்டு சேவை அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் வெளிவிவகார செயலாளர் கொலம்பகேயை சந்தித்தனர்.

இலங்கை வெளிநாட்டு சேவை உறுப்பினர்கள் அத்தகைய நன்கொடைகளை ஏற்றுக்கொள்வது பொருத்தமானது அல்ல என்றும், இது வெளிநாட்டு சேவையையும் வெளியுறவு அமைச்சகத்தையும் இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளும் என்றும் அவர்கள் வெளிவிவகார செயலாளரிடம் சுட்டிக்காட்டினர்.

நிலைமையை சமாளிக்கும் முயற்சியில், வெளிவிவகார செயலாளர் கொலம்பகே, உணவுப்பொதிகளை வெளிவிவகார அமைச்சின் நலன்புரிச் சங்கம் ஏற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்தார். எனினும் கிடைத்த தகவல்களின்படி, வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திர அதிகாரிகள் மட்டுமல்ல, வெளியுறவு அமைச்சகத்தில் உள்ள மற்ற அனைத்து ஊழியர்களும் சீனாவின் உணவுப்பொதிகளை ஏற்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர் என்று ஆங்கில செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறா வளர்ப்பில் போட்டி மனப்பான்மை 50 புறாக்கள் எரித்துப் படுகொலை!

## கொட்டடியில் இழிசெயல்

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம்- கொட்டடிப் பகுதியில் 50 புறாக்கள் விசமிகளால் எரித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளன.

புறா வளர்ப்பில் ஏற்பட்ட போட்டி மனப்பான்மையாலேயே இந்த இழிசெயல் இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். நகரில் பூட்டுத் திருத்தும் தொழில் புரியும் ஒருவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்ற சமயம் வீட்டுக்குள் நுழைந்த மர்ம நபர்கள் கூட்டுக்குள்ளும் வெளியிலும் பெற்றோல் ஊற்றிப் புறாக்களை எரித்துக் கொன்றுள்ளனர். தீ பரவியதால் புறாக்கள் அல்லோலகல்லோலப்படும் சத்தம் கேட்டு அயலவர்கள் தீயை அணைக்கக் கடும் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் சுமார் 50 புறாக்கள் எரிந்து இறந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.



எரித்துக் கொல்லப்பட்ட புறாக்களில் சில உயர்ரக பந்தயப்புறாக்கள் என்றும் அவற்றின் பெறுமதி பல ஆயிரம் ரூபா என்றும் தெரியவருகின்றது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கச் சென்ற போது, பறவைகள் வளர்ப்புக்கான அனுமதியை சார்ந்தோர் பெறாத காரணத்தால் அது முறைப்பாடாகப் பதிவு செய்ய முடியாத விடயம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-20)

# கடன் செலுத்துவதை நிறுத்த டொலர் இன்மையே காரணம்

## மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் விளக்கம்

கொழும்பு, மே 17


**நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி 5 மில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்தமையே மத்திய வங்கியால் வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகை தற்காலிக மாக இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணம் என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி சுட்டிக்காட்டியுள்ளார்.**

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களை அடுத்து வெளிநாட்டுக்கடன் மீள் செலுத்துகையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது என்றும், வெகு விரைவில் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி அறிவித்தது.

வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகையை இடைநிறுத்துவதற்கு மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் நாட்டின் பொருளாதார நிலைவரம் தொடர்பான கலந்துரையாடலொன்றில் தெளிவுபடுத்தும்போதே முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இந்தத் தீர்மானம் உரியவாறு மேற்கொள்ளப்படவில்லை என்றும், இவ்வாறு தீர்மானிப்பதற்கு முன்னதாக கடன் வழங்குநர்களுடன் இதுதொடர்பாகக் கலந்துரையாடியிருக்கவேண்டும் என்றும் சிலரால் குற்றஞ்சாட்டப்படுவதை ஏற்றுக்கொண்ட அவர், இருப்பினும் இவ்விடயத்தில் மத்திய வங்கியிடம் வேறு தெரிவுகள் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் வெளிநாட்டுக்கையிருப்பு 5 மில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்திருப்பதை அறிந்துகொண்ட மத்திய வங்கியின் புதிய ஆளுநர், கடன்களை மீளச்செலுத்தமுடியாத நாடாக இலங்கை மாறுவதைத் தடுப்பதற்காக வேறு தெரிவுகளின்றி இதனைச் செய்திருக்கின்றார் என்றும் முன்னாள் ஆளுநர் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கையை கடன் வழங்குநர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நம்கின்றேன். இது இயல்பாகவே முன்னெடுக்கப்படும் ஒரு நடவடிக்கை என்றும் முன்னாள் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



# கனேடியத் தூதுவருடன் சஜித் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, மே 17

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னடைவு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம)

# ரணிலின் நியமனம் அரசமைப்புக்கு முரண்

## அமரபுர மகா சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 17

தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் தற்போதுள்ள சமூக முறைமையை மாற்றியமைக்க முடியாது. அவர் அரசமைப்புக்கு முரணாகவே பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார் என அமரபுர மகா சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பதில் மகா நாயக்க தேரருமான பேராசிரியர் பல்லேகந்தே ரத்தனசார தேரர் தெரிவித்துள்ளதாவது:

மகாநாயக்க தேரர்கள் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. நாட்டில் தனிநபரை அடிப்படையாகக் கொண்ட அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். சமூகத்திலிருந்து கட்சி சாராத ஒரு தலைவரே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவேண்டும்.

அவ்வாறில்லை எனில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது.

இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் பதவியை ஏற்கவேண்டும் என்று ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை யாரும் ஏற்கவில்லை. மூத்த அரசியல்வாதி என்ற ரீதியிலும், சர்வதேச தொடர்புகளைக் கொண்டவர் என்ற ரீதியிலும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதற்கு கோத்தாபய முடிவு எடுத்துள்ளார். அதன் ஊடாக நாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியும் என்று நாம் நம்பவில்லை. காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் கோரிக்கையும் இதுவல்ல.

அவர்களால் கட்சி சாராத ஒருவரே இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது- என்றார். (எ-இ)

# சாராய விற்பனை: சந்தேகநபர் கைது



யாழ்ப்பாணம், மே 17

போயா தினத்தில் மதுபானச்சாலைகளைத் திறக்கத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் கொடிகாமத்தில் சட்டவிரோதமாக சாராயத்தை, வீட்டில் வைத்து விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து குறித்த இடத்தைப் பொலிஸார் முற்றுகையிட்டனர். அங்கிருந்து ஒரு தொகை சாராயப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபரொருவரும் கைதுசெய்யப்பட்டார். (க-125)

# ராஜபக்சக்கள் கருத்துமுரண்பாடு ரணில் ஜனாதிபதியாக வாய்ப்பு!

## அசாத் சாலி கணிப்பு

கொழும்பு, மே 17

ராஜபக்சக்களின் குடும்பத்துக்குள் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக எதிர்வரும் காலங்களில் கோத்தாபய ராஜபக்ச பதவி விலகி தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்கலாம் என்று மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.



முன்னாள் பிரதமரை ஜனாதிபதி கா[illegible]தால் குடும்பத்துக்குள் கடும் அரசியல் மோதல் ஏற்பட்டுள்ளது. ஒருவரையொருவர் காட்டிக்கொடுக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிலங்கன்...

பில் அவர் குறிப்பிடுகையில்;
2020 - 2021 இல் மட்டும் விமான சேவை 45 பில்லியன் ரூபா நஷ்டமடைந்துள்ளது.
2021 மார்ச் 31 ஆகும் போது இதன் மொத்த நஷ்டம் 372 பில்லியன்களாக இருந்தது. நாம் இதனை தனியார் மயப்படுத்தினாலும் இந்த நஷ்டத்தை நாமே ஏற்க நேரிடும். இந்த நஷ்டத்தை வாழ்க்கையில் ஒருமுறையாவது விமானத்தில் பயணிக்காத இந்த நாட்டின் ஏழை எளிய மக்களும் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

## அனைத்துக்....

அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ரணில் தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயார் என அறிவித்துள்ளன.
முன்னர் எதிர்ப்பு வெளியிட்டிருந்த 11 கட்சித் தலைவர்களின் சுயாதீன அணி மற்றும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி என்பனவும் நேற்று தமது ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தின. முன்னதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவைத் தெரிவித்திருந்தது.

**ஐக்கிய மக்கள் சக்தி**

தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளும் நலன் சார்ந்த வேலைத் திட்டங்களுக்கு அரசாங்கத்தில் பதவிகள் எதனையும் பெறாமல், நாடாளுமன்ற செயல்முறையின் கீழ் முழுமையான ஆதரவை வழங்க ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஏகமானதாக முடிவு எடுக்கப்பட்டது.
என்றாலும், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தம் பக்கம் சாதகமாக்கிக் கொள்ள மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அடிப்படைக் கொள்கைகளுக்குப் புறம்பாக, நாடாளுமன்ற ஆளும் கட்சியின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் செயற்பாடுகள் எடுக்கப்பட்டால் குறித்த ஆதரவை நிபந்தனையின்றி இடைநிறுத்துவதாகவும் நாடளுமன்றக் குழு முடிவு செய்தது.

**சுயாதீன அணி**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிய 11 கட்சிகள், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு தீர்மானித்துள்ளன என்று உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். எனினும் எந்த அமைச்சரவை பொறுப்பையும் ஏற்கப்போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்காக பிரதமர் நியமித்துள்ள குழுக்களின் நடவடிக்கைகளில் இணைந்து கொள்வோம் என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். பிரதமரை நேற்று சந்தித்த பின்னரே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## இன்று...

எதிர்ப்பு போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தப்பட்டு, அது பெரும் கலவரமாக மாறியது. அதனைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து விலகினார். அத்துடன் அலரிமாளிகையிலிருந்து கடும் பாதுகாப்புடன் திருகோணமலை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுதங்கவைக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்று வரையில் அவர் பொதுவெளிக்கு வரவேயில்லை.
நாடாளுமன்ற அமர்வு இன்று இடம்பெறவுள்ள நிலையில் அவர் அதில் கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ-5)

## முள்ளிவாய்க்கால்...

லிருந்து முள்ளிவாய்க்கால் நோக்கி ஆரம்பமான பேரணி, பல்கலைக்கழகத்துக்கு ஊர்தியோடு நேற்று வந்தடைந்தது. பல்கலை வளாகத்திலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் மாணவர்களுடன் இணைந்து, பேரணியில் கலந்து கொண்ட சிவில் சமூகத்தினர் ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர் அஞ்சலி செலுத்தினர். மாணவர்களால் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி சிவில் அமைப்பின் பிரதிநிதிகளும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் பிரதிநிதிகளுக்கும் சிங்கள மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. (அ-ஒ-125)

## நம்பிக்கையில்லாத்...

விக்கப்படுகின்றது. நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை ஒத்திவைக்கக்கோரும்தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றால் மாத்திரமே, ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு கொண்டு வரப்படும் என்பதாலேயே இந்த நிலைமை காணப்படுகின்றது.
ஐக்கிய மக்கள் சக்தியால் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத்தீர்மானமும் சேர்த்தே சமர்ப்பிக்கப்பட்டது.
ஆனால், தற்போது அரசியல் களநிலைமைகள் மாற்றமடைந்துள்ளன. பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவிவகிக்கும் நிலையில், அவரது அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் ஆதரவளித்துள்ளன. இதனால் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுக்கக் கோருவதற்கு முன்னதாக நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை ஒத்திவைக்கக் கோரவேண்டும். அதற்கு வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன்போது வாக்கெடுப்பில் வெற்றிபெற்றால் மாத்திரமே ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். (அ-ஒ-5)




**புனித பிலிப்பு நேரியார் ஆலயம் செம்பியன் பற்று**

இன்று (17.05.2022) செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் ஆரம்பமாகின்றன.

எதிர்வரும் (25.05.2022) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணை விழா இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 26.05.2022 (வியாழக்கிழமை) காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் திருநாள் திருப்பலி இடம்பெறும்.

இத்திருவிழாவிற்கு அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன் அழைத்து நிற்கும்
**செம்பியன்பற்று பங்குத் தந்தை, ஆலய அருட்பணி சபையினர் மற்றும் பங்கு மக்கள்**

(CS 44701) (3/6)

## மரண அறிவித்தல்



**பத்மநாதன் பாக்கியம் (மணியக்கா)**

யாழ் ஆவரங்காலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது மட்டுவில் தோப்பு வீதியில் வசித்து வந்தவராகிய காலஞ்சென்ற பத்மநாதன் பாக்கியம் (மணியக்கா) அவர்கள் கடந்த (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கைராசி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், சண்முகநாதன் சாரதாதேவி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சந்திரகுமார், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, காலஞ்சென்ற ஞானசேகரம் காலஞ்சென்ற சுமதி,ரதி, சுமதி(சுதா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மிருதுனா-பஜிதன், வகிதன், பவிதா, சாருஜன், சங்கீதா-பிரகாஷ், நடனகீதா-புண்ணியராஜசர்மா, ஞானகீதன்(ஜீவன்), றஜிதா, நிஷாந்தன்-நிஷாந்தினி, பிருந்தா-சதீஸ்குமார், பிருஷாந்தன்-கிறிஸ்டீனா, கிருஷ்ணா-பிரபாலினி, ஐங்கரன், கலைநிலா, கலைபிரியா, ஆதித்தியன், அஜீபன், பவித்திரன், இமையவன், டனுஷ்கா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அலாலயா, அயானா, நிஜிகாஷ், நிலுஷா, நிலக்ஷா, சுபஸ்ரீ, ஹம்சிகன் அஜய் கார்த்திகேயசர்மா, சுபீட்சன், பியுட்சன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**077 926 6947**

தகவல்:
**குடும்பத்தினர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14
11
1932



உதிர்வு
17
05
2021

அமரர் திருமதி
**கனகசுந்தரி சின்னத்தம்பி [குஞ்சு]**

அன்பினிலே எமை அரவணைத்து
ஆளாக்கிவிட்ட எங்கள் அன்னையே!
ஆண்டொன்று ஆனதம்மா ஆருயிரே உங்களைப் பிரிந்து
பொறுமையின் இலக்கணமாய்
பல இன்னல்கள் மத்தியிலும்
எம்மை பலமாக வளர்த்தீரே
ஈராறு மாதங்கள் சென்றாலும் ஈரவிழிகள் இன்னும் காயவில்லை
அன்பால், பண்பால் நட்பால்
உரிமையுடன் அனைவரையும் ஆர அரவணைத்த
ஆளுமையின் உறைவிடமே
குடும்பத்திற்கு தெய்வமாக விண்ணில் இருந்து வழிகாட்டி
ஆசீர்வதிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(CS 19715) (3/6)

## மரண அறிவித்தல்



**திருமதி சதர்மதேவா சரஸ்வதி**

நயினாதீவு 08ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சதர்மதேவா சரஸ்வதி அவர்கள் நேற்று (16.05.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிபரம் பின்னர் அறியத்தரப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திடீர் ஊரடங்கு

கொழும்பு, மே 17

நாடு முழுவதும் நேற்று இரவு 11 மணியிலிருந்து இன்று அதிகாலை 5 மணி வரையில் திடீரென ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இது தொடர்பான அறிவித்தல் நேற்று மாலையே வெளியிடப்பட்டது. அதில் இரவு 8 மணியிலிருந்து என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும் பின்னர் அது திருத்தப்பட்டு இரவு 11 மணி என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

(அ-ஒ-இ)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 55 ரூபாய்
இழுத்து பதிக்க - 75 ரூபாய்
077 334 1281
(NI. 18236) (3/6)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் திரு.சுதன் அவர்களின் அன்புத் தந்தை

**இராசையா தயாபரன்**

**(இளைப்பாறிய T.O கட்டடத் திணைக்களம்)**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

(CS 44713) (3/6)

தோற்றம் 05.01.1949 மறைவு 15.05.2022

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14 . 10 . 1939



மறைவு
20 . 05 . 2019

அமரர்

**அம்பலவாணர் சின்னத்தம்பி முருகேசு**

திதி : வைகாசி மாத அபரபக்க துதியை

அன்பிற்கு இலக்கணமாய்
பண்புடமை மிக்கவராய்
இரக்கத்தின் இருப்பிடமாய்
நாணயமாய் வழிநடந்தீர்கள்

துன்புற்றோர் துயர் துடைத்து
அனைவரது உயர்வுக்காய் பாடுபட்ட உங்களை
இறைவன் தன்னடி சேர்த்து விட்டான்
நாம் என் செய்வோம் அப்பாவே

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்முடன்
என்றென்றும் வாழும்.

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி

குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
16 - 09 - 1945



உதிர்வு
17 - 04 - 2022

கடந்த 17.04.2022 ஞாயிற்றுக்கிழமை காலமாகிய
எங்கள் குடும்பத்தலைவர்

அமரர்

**யோசேப் எட்வேட் இம்மானுவேல் (தாசன்)**

(ஓய்வுபெற்ற இயந்திர இயக்குனர் – யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை)

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியான இன்று (17.05.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு கொண்டு செபிக்கவும் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

117/2, மொறிஸ்லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(CS 44679) (3/6)

பிரிவில் துயருறும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## இராசையா தயாபரன்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கட்டடங்கள் திணைக்களம்,
கட்டட ஒப்பந்தகாரர் தயா & சன்ஸ்)

பிறப்பு 05.01.1949 — இறப்பு 15.05.2022

இல. 119A கண்டி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசையா தயாபரன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கட்டடங்கள் திணைக்களம், கட்டட ஒப்பந்தகாரர் தயா & சன்ஸ்) அவர்கள் நேற்று முன்தினம் (15.05.2022) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா, பரமேஸ்வரி தம்பதியினரின் புதல்வரும், புஸ்பராணி அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் சிறிதரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பரமேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம அபிவிருத்தி திணைக்களம், வ.மா) சுரேன் (ஆசிரியர்- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சங்கீதா, சுதன் (ஆசிரியர், செங்குந்தா இந்து கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கண்ணன் (உரிமையாளர், Softview கணினி நிறுவனம்), காயித்திரி (ஆசிரியை, யாழ். இந்து கல்லூரி), கார்த்திகா (விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தீபிகன், தீனுசன், சுவாஸ்திகா, நேத்திரன், நிலாஞ்சனன், காசிகா, ஆகியோரின் பாசமிகு பேரனாரும், சந்திராதேவியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2022) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்கு சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

077 589 0073, 077 969 4271

(CS 43982) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகமோசமான...

நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
நாட்டின் தற்போதைய நிலைமையின் உண்மைத் தன்மையை பிரதமர் வெளியிட்டதுடன், எதிர்காலத்தில் ஏற்படும் சவால்கள் குறித்தும் விவரித்தார்.
அவரது உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**வருமான எதிர்வுகூறலில் பிழை**

பிரதமர் பதவியை நான் கேட்டுப் பெறவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையைக் கருத்திற் கொண்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார். நான் அரசியல் தலைவராக மட்டுமன்றி இலவசக் கல்வியை அனுபவித்து கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டத்துறையில் பட்டம் பெற்று உயர்ந்த தேசியத் தலைவர் என்ற வகையிலே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.
இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. 2022 க்கு ஆரம்பத்தில் கடந்த அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபா வருமானமாக உள்ளன எனக் குறிப்பிடப் பட்டிருந்தாலும், இந்த வருடத்துக்கான உண்மையான வருமான எதிர்வுகூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாவாக உள்ளது.

**செலவு அதிகரிப்பு**

2022ஆம் ஆண்டுக்கான அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபா. எனினும், கடந்த அரசில் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022ஆம் ஆண்டுக்கான அரசின் மொத்தச் செலவு 4 ட்ரில்லியன் ரூபா. வருடத்துக்கான வரவு - செலவு பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாவாக உள்ள அதேவேளை அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும்.
அதேபோன்று அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை 3 ஆயிரத்து 200 பில்லியன் ரூபா. நாம் மே மாதத்தின் இரண்டாம் வாரம் ஆகும்போது ஆயிரத்து 950 மில்லியன் ரூபாவை செலவு செய்திருந்தோம். அதன்படி அண்ணளவான மிகுதி ஆயிரத்து 250 மில்லியன் ரூபா. அமைச்சரவையில் திறைசேரி முறிகளை வழங்கும் அனுமதிக்கப்பட்ட எல்லையை 3ஆயிரம் பில்லியனில் இருந்து 4ஆயிரம் பில்லியன் வரை அதிகரிக்கும் யோசனையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க தீர்மானத்தை எடுத்தோம்.

**திறைசேரியில் பணம் இல்லை**

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அந்நியச் செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர். ஆனால் இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலரைக்கூட தேடிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயுவை கப்பலில் ஏற்றும் பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலரைக்கூட இந்த நேரத்தில் நிதியமைச்சால் தேடிக்கொடுக்க முடியாதுள்ளது.
இவ்வனைத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் நாம் முகம் கொடுக்கும் மிகமோசமான சில சிக்கல்கள் உள்ளன. எதிர்வரும் சில நாள்களில் வரிசைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு மிகவிரைவில் சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலரைத் தேடவேண்டிய உள்ளது.
இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது. நேற்று வந்த டீசல் கப்பலால் இன்றிலிருந்து உங்களின் டீசல் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும்.
இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் மே 19 மற்றும் ஜூன் 1 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும் மே 18 மற்றும் மே 29 இரண்டு பெற்றோல் கப்பல்கள் வரவுள்ளன. இன்றுவரை 40 நாள்களுக்கு மேலாக இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோல், மசகு எண்ணெய், ஏற்றிவந்த 3 கப்பல்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு செலுத்தும் பொருட்டு திறந்த சந்தையில் டொலரைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**15 மணிநேர மின்வெட்டு?**

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாள்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு. ஆனால், நாம் இதற்கு தேவையான நிதியை தேடிக்கொண்டுள்ளோம். அதேபோன்று முடிந்தளவு நுகர்வோருக்கு எரிவாயுவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு 20 மில்லியன் அமெரிக்க டொலரைக் கூடிய விரைவில் தேடவேண்டும்.
மண்ணெண்ணெய் சம்பந்தமான நிலைமை இதனை விடப் பயங்கரமானது. இந்த நேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன. நம்மிடம் கையிருப்பில் உள்ள டொலரின் அளவு மிகவும் சிறியது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

**14 அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு!**

இதற்கிடையில், மற்றுமொரு உதாரணம் மருத்துவ மருந்துகளுக்குத் தட்டுப்பாடு. இருதய நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான சிகிச்சை உபகரணங்கள் உள்பட பல மருத்துவ மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது.
மருத்துவ மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் தேவையான உணவுகளை வழங்கும் வழங்குநர்களுக்கு 4 மாதங்களாக கட்டணம் செலுத்தப்படவில்லை. அவர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை 34 பில்லியன் ரூபா. அதேபோன்று அரச ஔடத கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்த மருத்துவ மருந்துகளுக்கு 4 மாதங்களாகக் கட்டணம் செலுத்தப்படவில்லை. அதனால் அவர்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க வெளிநாட்டு மருத்துவ நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.
14 அத்தியாவசிய மருத்துவ மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத்தில் எமது மருத்துவ வழங்கல் பிரிவுக்கு இயலாது உள்ளமை மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது. இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து, மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால் விசர் நாய்கடி எதிர்ப்பு மருந்துக்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.
இதற்கிடையில் 2022 ஆண்டுக்காக முன்வைக்கப்[illegible] செலவு திட்டத்[illegible] - செலவுத் திட்டமொன்றை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனை சலுகை வரவு - செலவுத் திட்டமாக முன்வைக்கவே நான் திட்டமிடுகிறேன்.

**எரிபொருள் விற்பனை நஷ்டம்**

குறுகிய காலத்துக்குள் நாம் இதனை விட மோசமான காலத்துக்கு முகம் கொடுக்கப்போகின்றோம். பணவீக்கம் மேலும் அதிகரிக்க இடமுள்ளது.
அரசு தற்போது 92 பெற்றோல் லீற்றர் ஒன்றில் ரூ. 84.38, 95 பெற்றோல் லீற்றர் ஒன்றில் ரூ. 71.19, டீசல் லீற்றர் ஒன்றில் ரூ. 131.55, சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றில் ரூ. 136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றில் ரூ. 294.5 என நட்டம் ஏற்படுகின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இந்த நஷ்டத்தை மேலும் தாங்கிக் கொள்ளமுடியாது. அதேபோல இலங்கை மின்சாரசபை மின் அலகு ஒன்றுக்காக உங்களிடம் ரூ. 17 ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபா வரை செலவு செய்கிறது. அதன்படி ஒரு அலகுக்கு 30 ரூபா நஷ்டம் ஏற்படுகிறது.

**பணம் அச்சடிப்பு**

நான் இந்த நேரத்தில் விருப்பப்படாவிட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும், உங்களுக்குத் தேவையான பொருள்கள் சேவைகளின் பொருட்டே அதனைச் செய்யவுள்ளது. ஆயினும் பணத்தை அச்சடிப்பதால் ரூபாவின் பெறுமதி குறையும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தற்போதைய நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபைக்குத் தேவையான நிதியைக்கூட தேடமுடியாதுள்ளது. ஆயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலக்கட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும்.

**நெருக்கடியான கட்டத்தில் உள்ளோம்**

[illegible]க்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் அசிங்கமாக இருந்தாலும் இது தான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்துக்கு நாம் கடந்த காலத்தை விட மிகவும் கஷ்டமான காலத்துக்கு முகம் கொடுக்கப் போகின்றோம். இந்த நேரத்தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால் இது குறுகிய காலத்துக்கு மட்டுமே.
எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்கவேண்டும். ஆனால் இதில் இருந்து நாம் மீள முடியும். அதன்பொருட்டு நாம் புதிய வழிக்குச் செல்ல நேரிடும்.

**தேசிய சபை**

தற்போது நிலவும் இந்தச் சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு தேசிய சபை அல்லது அரசியல் சபை ஒன்றை அனைத்துக் கட்சிகளினதும் பங்கேற்புடன் உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டி உள்ளது.
அதன் மூலம் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து எட்டப்படும் தீர்மானத்துக்கு அமைய நிச்சயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொதுவான குறுகிய கால மத்தியக் கால - மற்றும் நீண்ட கால செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டை மீண்டும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல எம்மால் முடியும். மண்ணெண்ணெய், எரிவாயு, எரிபொருள் வரிசை இல்லாத நாடு, மின்சாரம் துண்டிக்கப்படாத நாட்டை, விவசாயத்தை சுதந்திரமாக மேற்கொள்ளக்கூடிய வசதிகள் உள்ள நாட்டை, இளைஞர், யுவதிகளின் நாளையதினம் பாதுகாக்கப்பட்ட நாட்டை, மனித வளம் போராட்டக் களத்தில் மற்றும் வரிசையில் வீணடிக்கத் தேவை இல்லாத நாட்டை, எல்லோரும் சுதந்திரமாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக் கூடிய நாட்டை, மூன்று வேளையும் உணவு உண்ணக் கூடிய நாட்டை நாம் கட்டியெழுப்புவோம் - என்றார். (அ-ஔ-44)

முள்ளிவாய்க்கால் நோக்கி

# வல்லை மண்ணிலிருந்து ஆரம்பமானது பேரணி

யாழ்ப்பாணம், மே 17
முள்ளிவாய்க்காலை நோக்கிய மக்கள் எழுச்சிப் பேரணி வல்வெட்டித்துறையிலிருந்து நேற்று ஆரம்பமானது.
வல்வெட்டித்துறை அம்மன் கோவிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டு முன்றிலில் இருந்து உணர்வுபூர்வமாக மக்கள் பேரணி ஆரம்பிக்கப்பட்டு பொலிகண்டி வரை சென்றது.
பருத்தித்துறை நகர், வதிரி சந்தி தொடக்கம் நெல்லியடி சந்திவரை, நல்லூர் சங்கிலியன் மன்னனுடைய சிலைப் பகுதியில் இருந்து தியாக தீபம் திலீபன் நினைவிடம் வரை நடை பவனி வந்து அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.
தொடர்ந்து பரமேஸ்வராச் சந்தியில் இருந்து யாழ். பல்கலைக்கழகம் வரை சென்றது. அங்கு பல்கலையில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.
பின்னர் வண்ணார்பண்ணை சிவன் ஆலயத்தில் இருந்து முட்டாஸ் சந்தியில் திரும்பி ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்தி வரை, மின்சார நிலைய வீதி ஊடாக யாழ். பேருந்து நிலைய வைரவர் ஆலயத்தின் ஊடாக ஆஸ்பத்திரி வீதிக்கு வந்து மீண்டும் சத்திரச்சந்தி நோக்கி சென்று உலகத்தமிழாராய்ச்சி படுகொலை நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திவிட்டு நடைபவனி நிறைவடைந்தது.
பின்னர் சாவகச்சேரி கொடிகாமம் ஆகிய பகுதிகளில் நடைபவனி இடம்பெற்று பரந்தனில் முதலாம் நாள் பேரணி நிறைவடைந்தது.
அதேவேளை, அம்பாறையிலிருந்து ஆரம்பமான பேரணி நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் நிறைவுற்றிருந்தது. இந்த நிலையில் நேற்று அங்கிருந்து ஆரம்பிக்கப்பட்ட மக்கள் எழுச்சிப் பேரணி திருகோணமலை வரை சென்று நிறைவடைந்துள்ளது. இரு பேரணிகளும் முல்லைத்தீவை நோக்கி இன்று பயணிக்கவுள்ளன. (அ-ஔ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைகழக மாணவிகள் தங்கியிருந்த வீட்டின் மீது தாக்குதல்

கொழும்பு, மே 17

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கொக்குவில் புகையிரத நிலையத்துக்கு அருகில் உள்ள அப்சரா எனும் யாழ். பல்கலைக் கழக மாணவிகள் தங்கியிருந்த தனியார் விடுதி (வீடு) மீது நேற்றுமுன்னிரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 4 மோட்டார் சைக்கிளில் வந்த ஐந்து பேரடங்கிய குழு ஒன்று அத்துமீறி நுழைந்து ஜன்னல் கண்ணாடிகளையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும், தளபாடங்கள் சிலவற்றையும் அடித்து நொருக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது. (அ-ஒ-26-125)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 69 பரப்புக் காணி விற்பனைக்கு.

- ✓இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓கைதடி சந்தி 200 M தூரம்
- ✓வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை 100 M தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓செம்மண் காணி.

தொடர்பு: 077 6234 204, 077 2880 152, 076 6583 621

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 4 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- ★ A9 வீதியில் இருந்து 150M தூரம்
- ★ லேடன் கொம்பனி பின்புறம்
- ★ நாவற்குழி சந்தியில் இருந்து 500 M தூரம்
- ★ நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- ★ நல்ல சூழல்
- ★ 20 அடி பாதையுடன்

முன் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 7 லட்சம்

பின் பகுதியாக உள்ள காணி 1 பரப்பு - 5 லட்சம்

தொடர்பு: 074 043 6673

## பணிப்பெண் தேவை

குப்பிளானில் அமைந்துள்ள வீடொன்றில் வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (CS 44665) (3/6)

077 017 2099, 077 959 6774

## உடன் வேலை வாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான ஐஸ்கிறீம் கடையில் பணியாற்றுவதற்கு பணியாளர்கள் உடன்தேவை.


வயது 18 தொடக்கம் 45 வரை

தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். (CS 1003) (3/6)

077 378 8746

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 33 பரப்பு காணி விற்பனைக்குண்டு




### நிலப்பரப்பு

- ❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
- ❖ A9 வீதியுடன் 6 பரப்பும்.
- ❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ❖ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- ❖ மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- ❖ அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 241 7589

(CS 44689)



## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 - 09 - 1933 |  | 12 - 05 - 2022 |

### திருமதி துரைராசா கனகம்மா

யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கு கோகுல வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜா கனகம்மா கடந்த (12.05.2022) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்லாச்சி தம்பதியரின் அன்பு புதல்வியும், அமரர் சுப்பிரமணியம் துரைராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தருமலிங்கம், குமாரசாமி, பொன்னம்பலம், தங்கச்சியம்மா, பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜசுலோசனா, யோகரஞ்சனா, மதனகுமார், கரிகரன், தேவகுமார், யசோனா, சூரியகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரத்தினம், தருமானந்தன், பவளராணி, சிவரோகினி, ரஞ்சினி, பகிரதி, அனுசினி ஆகியோரின் அன்பு மாமியாரும், நவிதராஜ், ரவிராஜ், யாழினி, மகிழேந்தினி, லோகசீலன், அமரர் ரஞ்சிததயாளன், றமணன், சங்கரி, பவதாரணி, தர்சிகன், அயினா, சுமிதன், யசிந்தா, சுஜீவன், சுகிர்தன், திவ்வியா, தேனுஜா, அஷ்வியா, றக்ஸ்சியா, கார்த்திகன், கதிர்ஷன், கபிதன், கஜிதன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கஜனன், பிரவின், மரீனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கோண்டாவில் கலைவாணி மக்கள் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர். (மதன்குமார்)

077 996 5453 (CS 8770) 1/6

## 1ஆம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 - 10 - 1954 |  | 27 - 05 - 2021 |

### தெய்வத்திரு. செல்லத்துரை ஜெயசோதிவரதன் (வரதன் மாஸ்ரார்)

அன்பின் சிகரமாய், அரவணைப்பில் அர்த்தமாய் வாழ்ந்த எம் அப்பாவே!
வார்த்தைகளால் வடிக்க முடியவில்லை நீங்கள் இல்லாத வெற்றிடத்தை
ஆண்டொன்று கடந்தாலும் உங்கள் இன்முகமும், புன்சிரிப்பும்
எம் மனதைவிட்டு அகலவில்லை அப்பா!
எங்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டி, ஒழுக்கத்தால்
தீபமேற்றி, சூடமாக எரிந்து எமக்கு ஒளிதந்த அப்பா!
நீங்கள் தான் எமக்கு மென்மேலும் வழிகாட்ட வேண்டும்.
நீங்கள் விண்ணுலகை விட்டு மறைந்தாலும் எம் மனங்களில்
என்றென்றும் வாழ்ந்திடுவீர்கள்
உங்கள் ஆத்மா கதிர்காமக் கந்தன் திருவடிகளில் இளைப்பாற வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி!

'கதிர்காமம்'
இணுவில் தெற்கு, இணுவில். (CS 44688) (3/6)

என்றும் நீங்கா நினைவலைகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.